ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௯	மெய்கண்டான்யாண்டு-௭௱௮ கார்த்திகைத்திங்கள் 1930௵ நவம்பர் மீ — டிசம்பர் மீ	பரல் ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதமவை யைந்தாய்
ஆறார்சுவை யேழோசையோ டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானிடம் வீழிம்மி ழலையே.

ஈறாய்=எல்லாப் பொருள்களும் அழியும் அழித்தற் காலத்தில் (சங்கார காலத்தில்) அவைகளெல்லாம் தன்னிடம் ஒடுங்கி நிற்கும் முடிவுப் பொருளாகியும்

முதல் (ஆய்)=படைப்புக் காலத்தில் எல்லாப் பொருள்களும் ஒடுங்கினவாறே தன்னிடமிருந்து தோன்றுதற்கு முதற் பொருளாகியும்

ஒன்றாய்=ஒப்பற்ற ஒரே பொருளாகியும்

இருபெண் ஆண் (ஆய்)=காப்புக் காலத்தில் உலகிலே ஆண் உருவமாயும் பெண் உருவமாயும் தோன்றும் எல்லா உயிர்ப் பொருளாகியும்

குண மூன்றாய்=சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் மூன்று குணங்களாகியும்

மாறா மறை நான்காய்=மாறுதலில்லாத இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களாகியும்

வருபூதமவை ஐந்தாய்—பருப் பொருள்களாய் முடிவில் வருகின்ற மண், நீர், தீ, வளி, வெளி என்னும் ஐம்பூதப் பொருள்களாகியும்

ஆறூர் சுவையாய்=ஆறு என்ற எண்ணுடன் பொருந்திய தித்திப்பு, கைப்பு, புளிப்பு, கார்ப்பு, உவர்ப்பு துவர்ப்பு என்னும் ஆறுசுவை களாகியும்,

ஏழோசை (ஆய்)=ச, ரி, க, ம, ப, த, நி, என்னும் ஏழுவகை இசை யோசைகளாகியும்,

ஓடு—இவைகளோடு

எட்டுத்திசை (ஆய்)—கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு என்னும் எட்டுத் திசை களாகியும்

தான் ஆய்=இவைகளிலெல்லாம் இரண்டறக் கலந்து தான் வேறு அவைகள் வேறு என்னும் பிரிப்பின்றி அவைகளெல்லாம் தான் என்று கூறும்படி கலந்து நிற்கிறவனுகியும்,

வேறு ஆய்—இவைகளெல்லாவற்றிலும் இரண்டறக் கலந்து நின்றாலும் தான் அவைகளுக்கு வேறாய் நிற்கும் தனிப் பொருளாகியும்

உடன் (ஆய்)=மேற் சொல்லியபடி ஒன்றாயும் வேறாயும் நிற்பதோடு அவைகளெல்லாம் இயங்குதற்குக் காரணமாய், அவைகளை இயக்கு தற்கு அவைகளுடனுமாய் நிற்கிற பொருளாகியும்

ஆனான்=இம்மூன்று நிலைகளும் சேர்ந்த அத்துவித நிலை ஆனவனுகிய சிவபிரான்

இடம்—உறைகின்ற இடமானது

வீழிமிழலை=வீழிமிழலை என்கிற இடமாகும்.

இந்த வீழிமிழலைத் தேவாரப் பாவானது இறைவன் உயிர்க ளோடும் உயிரில்லாத பொருள்களோடும் கலப்புத் தன்மையால் ஒன்று யும் பொருட்டன்மையால் வேறாயும் உயிராதற்றன்மையால் அவைகளை இயக்கி உடனுகியும் நிற்கும் அத்துவித இலக்கணம் கூறுகின்றது. இந்தப் பா சிவஞானபோதம் இரண்டாவது சூத்திரம் முதலாவது அதி காரணத்தில் கூறிய பொருளை விளக்குகிறது.

ஈறாய் முதலொன்றாய் - இறைவன் முறையே அழித்தற் காலத்தி

லும் மீளப் படைத்தற்காலத்திலும் தனித்து நிற்கும் நிலைகளைக் கூறுகின்றது.

இருபெண் ஆண் என்பது=படைப்புக் காலத்துக்குப் பின் ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு வரையுள்ள உயிர்களோடும் தேவர்கள் உயிர்களோடும் நிற்கும் அத்துவித நிலையைக் குறிக்கின்றது. பெண் சத்தியையும் ஆண் சிவத்தையும் குறிக்கின்றன.

குணமூன்றாய் மாறாவூர் பூதமவை ஐந்தாய் ஆறார் சுவையேழோசை எட்டுத்திசை ஆய் என்ற சொற்றொடர்கள் இறைவன் உயிரில்லாத உலகப் பொருள்களெல்லாவற்றோடும் கலந்து நிற்கும் அத்துவித நிலையைக் குறிக்கின்றது.

அவை என்பது=இந்த உயிரில் பொருள்களெல்லாம் சுட்டறிவினால் அறியப்படும் பொருளெனக் குறிப்பிடுகின்றது.

மாறா மறை நான்காய்=இறைவன் நான்கு வேதப் பொருள்களிலும் நிற்கும் அத்துவித நிலையைக் குறிக்கின்றது. நான்கு வேதங்களும் பிரணவத்திலிருந்து விரிந்தனவாதலின் இறைவன் நாதப்பொருள் எனக் குறிக்கின்றது.

தானாய் என்பது=இறைவன் மேலே சொன்ன உயிர்ப்பொருள் உயிரில் பொருள் ஆகிய எல்லாப் பொருளினும் கலந்து ஒன்றாய் நிற்கும் அத்துவித நிலையைக் குறிக்கின்றது.

வேறாய் என்பது=இறைவன் இப்பொருள்களெல்லாவற்றினுங் கலந்து நின்றாலும் அவற்றிற்கு வேறாயுள்ளவன் என்னும் வேறாய் நிற்கும் அத்துவித நிலையைக் குறிக்கின்றது.

உடன் ஆய் என்பது=இறைவன் உயிர்க்கு உயிராதற்றன்மையால் எல்லாப் பொருள்களையும் இயக்கி உடனாய் நிற்கும் அத்துவித நிலையைக் குறிக்கின்றது.

ஆனான் என்று இறந்த காலத்தாற் கூறினது இயல்புபற்றி; தொல்காப்பியம் சொல்லதிகாரம் உ௪௫-வது சூத்திர விதிபார்க்க.
இடம் எழுவாய், வீழிமிழலை பயனிலை.

மா. வே. நெல்லையப்பபிள்ளை.

'மணிவாசகரும் கண்ணப்பரும்'

(௱௯௫-பக்கத் தொடர்ச்சி)

[தமிழ்ப்புலவர் திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் எழுதியது.]

மேல் வருவனவெல்லாம் முன் காட்டப்பட்டவைகளினும் ஒருபடி சிறந்தனவாகும்; என்னை? அடிகள் எவ்வெவ்வாதரவு தமக்கு அளிக்க வேண்டுமென்று ஆண்டவனை வேண்டுகின்றாரோ, அவற்றை யெல்லாம் அவ்வாண்டவனுக்கு அன்பர் பெருமானாகிய கண்ணப்பர் தமது அன்பின் முதிர்ச்சியால் அளிக்கின்றாராகலின் என்க.

அழுதடியடைந்த அன்பர், "யான் ஒரு துணையின்றி வருந்துகின்றேன்; நீயே எனக்கு உறுதுணையாய் நின்று உதவல் வேண்டும்" என்பார்,

"நைஞ்சேனுயேன் ஞானச்சுடரே நானோர் துணைகாணேன்"
"தனித்துணை நீ நிற்க"
"மனத்துணையே"

என அரற்றுகின்றார். கானவர் பெருமானுங் கண்ணப்பரோ இறைவனை இறுகத் தழுவிக்கொண்டு,

"வெம்மறக் குலத்துவந்த வேட்டுவச் சாதியார்போற்
கைம்மலை கரடிவேங்கை யரிதிரி கானந்தன்னில்
உம்முடன் றுணையாயுள்ளா ரொருவரு மின்றிக்கேட்டேன்
இம்மலைதனியே நீரிங்கிருப்பதே யென்றுணைந்தார்"

(பெரியபுராணம்)

"யானையும்புலியுமெண்கும் யாளியு முளவுங்கூர்ங்கோட்
டேனமுந் திரியுங்காட்டு ளெந்தைநீ துணையுமின்றிக்
கூனல்விற் றடக்கைவேடர் குலமென விருப்பதென்னே
ஊனுண வுனக்கியாவ ருண்கெனத் தருவாரந்தோ"

(சீகாளத்தி புராணம்)

என உலகனைத்திற்கும் உறுதுணையாம் ஒப்பற்ற ஒருவனுக்குத் துணையில்லையே எனப் புடைபடக்கவன்று,

"தேனொடு தினையின்பிண்டி தீம்பழங் காய்கிழங்கு
மானொடு முயலெய்கேழல் வல்லுடும்பழுங் கிவற்றின்
ஊனுண வென்றிவ் வெல்லாமுதவுவல் யானேநல்ல
கானவர் துணையுண் டெம்மூர்க் காண்டிவா"

என்றுகவின் பெற்ற அன்பு மொழியால் ஆண்டவனைத் தமது உடுப்பூருக்கு அழைக்கின்றார்.

இன்னும் அடிகள்
"ஆதமிலியான் பிறப்பிறப்பென்னு மருநரகில்
ஆர்தமருமின்றியே அழுந்துவேற் காவாவென்
றோதமலிநஞ்சுண்ட வுடையானே யடியேற்குன்
பாதமலர் காட்டியவாறன்றே யெம்பரம்பரனே"

எனத் தமர் யாருமில்லாத தம்மை அவ்விறைவன் "அஞ்சற்க" என்று ஆண்டருளியதைக் குறிப்பிட்டு, அவன் தமரான வகையை "அன்னை யொப்பா யெனக்கத்தனொப்பாய்" எனவும், "அம்மையே அப்பா" எனவும், "அம்மான" எனவும், "அண்ணா" எனவும் கூறிய அருள் மொழிகளால் விளக்கியருளினார்.

இங்ஙனம் எல்லா வுலகிற்கும் அப்பனாய் அம்மையாய் அன்புடைய மாமனாய் மாமியாய் அனைத்துமாயுள்ள அருட் பெருந்தகையாய ஆண்டவனுக்குத் 'தமரில்லையே' என வருந்தி,

" ஆர்தமராக நீரிங்கிருப்பதென் றகலமாட்டேன் "

எனக் கண்ணீர் வடிக்கின்றார் கானவர் தலைவர்.

இனி, எதற்கும் அஞ்சாத தன்மையை "யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம்" என்னும் வீரமொழிகளால் விளக்கியருளி "அந்தமில் பிறவி யேழுமடு பகையென்ப தோர்ந்தேன்" எனக் கூறுமாற்றால் பிறவி யென்னும் பெரும் பகைக்குத் தாம் பெரிதும் அஞ்சுதலை அறிவுறுத்தருளிய ஆண்டகையாகிய அழுதடி யடைந்த அன்பர், அப்பகையை வேரொடு களைபவனும்

அப்பகை தனக்குச் சிறிதுமில்லாதவனும் "பெரியார் பிறப்பறுப் பானென்றுந் தன் பிறப்பை யறியான்" (அப்பர்) ஆகிய ஆண்டவன், தம்மை 'அஞ்சேல்' என்றருள் செய்ய அவாவி,

"அஞ்சேலென்ன ஆசைப்பட்டேன் கண்டாயம்மானே"
"அஞ்சேலென் றிங் கருளாய் போற்றி"
"அருளாதொழிந்தா லடியேனை யஞ்சேலென்பார்யார்"
"ஆவா வென்னுவிடி லென்னையஞ்சே லென்பாராரோதான்"
"என்னையப்பா அஞ்சலென்பவ ரின்றிநின் றெய்த்தலைந்தேன்"

எனத் திருவாசகத்திற் பாரித்துக் கூறி,

"உய்ஞ்சே னெம்பெருமானே யுடையானே யடியேனை
அஞ்சே லென்றாண்டவா றன்றே யம்பலத்தமுதே"

எனவும்,

"உய்ஞ்சேனு னுடையானே யடியேனை வருகவென்
றஞ்சேலென் றருளியவா ரூர் பெறுவாரச்சோவே"

எனவும் அப்பெருமான் தம்மை 'அஞ்சேல்' என்றருளினமை யும் விளக்கிப் போந்தார்.

இங்ஙனம் "புலனைந்தும் பொறிகலங்கி நெறி மயங்கி யறி வழிந்திட்டைம் மேலுந்தி, யலமந்த பொழுதாக அஞ்சேலென் றருள் செய்யும்" கூத்தப் பெருமானைக் குன்றவர் பெருமான்,

"குன்றிடை யெனக்கு வாய்த்த குலமணி விளக்கே எந்தாய்!
உன்றழற் பசிதணிப்ப உறுசுவை யிறைச்சிகொண்டே"

"உழுந்துருள் பொழுதின்மீள்வே னொருகண மேனுந்தாழேன்
வழங்குறு கொடுவிலங்கு வருமென அஞ்சேல் ஐய
எழுந்துமேல்வந்த தாயினென்னை யொய்யெனக்கூவு"

(சீகாளத்தி புராணம்)

என்கின்றார். இந்நிகழ்ச்சிகளனைத்திற்கும் காரணமாயிருந்தது எது? அவரது அன்பின் முதிர்வன்றோ! அவ்வன்பு பரிணமித்த இந்நிகழ்ச்சிகளை யன்றிப் பிற நிகழ்ச்சி இறையும் அவரிடத்து இல்லாமையாலன்றோ அவர் 'அன்பினது உண்மை வடிவம்'

எனச் சேக்கிழார் பிரானாற் செப்பப்பட்டார். (இஃது முன்னரே காட்டப்பட்டது.)

இன்னும் ஒருவர் மாட்டு அன்பு செய்தாரொருவர் அவ்வன்பின் முதிர்ச்சியால் தம்மினும் பன்னூறு மடங்கு எல்லா வகையானுஞ் சிறந்த அவ்வன்பு செய்யப்பட்டாரைத் தம் நிலையில் வைத்து எண்ணி அவருக்கு ஊறு அல்லாதனவற்றையெல்லாம் ஊறு எனக் கருதிக் கவல்வதாகிய அன்பின் இலக்கணமொன்றும் நாயனார் வரலாற்றில் அமைந்து கிடத்தல் காண்க. இதனை, எல்லாம் வல்ல இறைவனுக்குப் பசிப் பிணி உண்டென்றும், அதை நீக்குதற்பொருட்டுத்தான் சென்று நல்ல ஊனுணவு கொண்டு வரல் வேண்டுமென்றும், அங்ஙனஞ் சென்றால் அங்கு வாழுங் கொடிய விலங்குகள் வந்து ஐயனுக்கு யாதாயினும் அல்லல் விளைத்துவிடுமென்றும், என்றாலும் இறைவன் மிகப் பசித்திருக்கின்றானாகலின் விரைந்து சென்று உணவு கொண்டுவரல் வேண்டுமென்றும், "எந்தாய்! உனக்கு உணவு தேடிக்கொண்டு உழுந்து உருளும் பொழுதிற்குள் ஒல்லென வருவல்; நீ 'இங்குள்ள விலங்குகள் வருங்கொல்' என்று அஞ்சற்க; ஒருவாறு வரின் அடியேனை விரைந்து அழைப்பாயாக" என்றுங் கூறியதனாலும் இவற்றோரன்ன பல நிகழ்ச்சிகளாலும் அறியலாம். 'நன்று நன்று! கண்ணப்பர் நூலாராய்ச்சியால் கடவுளிலக்கணந் தெரிந்துகொள்ளாதவராகலின் இங்ஙனமெல்லாஞ் செய்தார்" எனின், அவ்வறிவு கைவரப் பெற்றார் மாட்டும் முறுகிய அன்பால் இந்நிகழ்ச்சி நேருதல் இயல்பேயாகும். நுணங்கிய கேள்வி மேலோனும், பொருட் செல்வமிக்குடைய குபேரனை நட்பாகக் கொண்ட கூத்தப் பெருமான் அச் செல்வமுடையான் நட்புக்குத் தகக் கல்விச் செல்வமுடைய ஒருவன் நட்பு வேண்டுமென்று பன்னாள்வரை காத்திருந்து நட்புக் கொள்ளப் பெற்றவனுமாகிய தம்பிரான் தோழன் சேரமான் பெருமானாயனாருடன் கோடிக் குழகரைக் கும்பிடுதற்குச் சென்று, ஆங்குக் குடிகள் யாவுமின்றி ஆண்டவன் தன்னந் தனியாக்கக் கடற்காற்று விரைந்து வந்து இடையறாது தன் மேல் மோத இருக்குங் காட்சியைக் கண்டு கண்ணும் கருத்தும் புண்ணாகி, அன்

பின் முதிர்வில் அவன் எல்லாம் வல்ல தன்மை மறைய, அவனை நோக்கி,

"கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரைமேற்
குடிதானயலே யிருந்தாற் குற்றமாமோ
கொடியேன் கண்கள் கண்டன கோடிக்குழகீர்
அடிகேளுமக்கார் துணையாக விருந்தீரே"

என வருந்துவதனால் அவ்வுண்மை புலனாகும். ஆயின், அவ்விருவர் தம்முள் வேற்றுமை யாதோவெனின், முன்னவர் அவ்வுணர்ச்சி மயமாகிவிடுவர். பின்னவர் உடனே தெளிந்துவிடுவர் என்க. என்னை? திண்ணனார் அதே நிலையில் நின்று விட்டமையானும், வருந்திக் கூறிய வன்றொண்டப் பெருந்தகையார் உடனே தமது நூலுணர்வாற் றெளிந்து "ஆ! கெட்டேன், என்னினைந்து என் கூறினேன்! வரம்பி லின்பமும் முடிவி லாற்றலும் வாய்ந்த நமது மாதேவனைக் காற்று மோதி என் செய்யும்? அவனது இயற்கைத் திருவுருவத்தின் கூறுகளிற் காற்று ஒன்றன்றோ? உயிர்களனைத்திலும் ஊடுருவித் தோன்றாத் துணையாக நிற்கும் அவனுக்கும் ஓர் துணை வேண்டுங்கொல்" என்று கருதி மறந்து கூறியதொன்று தவறாயின் அதை மறைத்தற்கு நகைச்சுவை தோன்றச் சில கூறும் உலகியலை ஒக்கத் தமது தோழனை நகை பொருந்தக் கூறுவார் போன்று,

"ஒற்றியூரென்ற வூனத்தினா லதுதானோ
அற்றப்பட வாரூரதென்ற கன்றாரோ
முற்றாமதி சூடிய கோடிக்குழகா
எற்றாற்றனியே யிருந்தா யெம்பிரானே"

எனக் கூறி யருளினமையானுமென்க.

(தொடரும்)

பண்டைத் தமிழ்ச் சொற்கள்

உடையான் (௧0)

(திரு. M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.)

1. உடையான் என்ற பண்டைத் தமிழ்ச் சொல் கடவுளைக் குறிக்கும் சொற்களில் ஒன்று. உடைமை என்ற சொல்லில் மை என்னும் பண்பு விகுதி கெட்டு எஞ்சி நின்ற 'உடை' என்பதுடன் ஆன் என்னும் உயர்திணை ஆண்பால் விகுதி சேர்ந்து யகர உடம்படு மெய் இடையிலே தோன்றி உடையான் என்ற சொல் வந்தது. உடையவன் உடையவர் உடையாய் என வழங்குதலும் உண்டு.

2. உடையான் என்று சொல்லவே யாரை அல்லது எதை உடையான் என்ற கேள்வி பிறக்கும். யாதாம் ஒரு பொருளை உடையவனையே நாம் உடையான் என்று கூறலாமே தவிர ஒரு பொருளுமில்லாதவனை உடையான் எனக் கூறுதல் பொருத்தமில்லாததாகும். உடையான் என்ற சொல்லின்முன் யாரை அல்லது எதை என்ற கேள்விக்கு விடையாக வரும் பொருளை நாம் வைத்தா லொழியக் கருத்து நிரம்புமாறில்லை. உள்ளனவாயுள்ள பொருள்களாகிய கடவுள், உயிர்கள் உயிரில் உலகம் என்ற மூன்றில் உயிரில்லாத உலகம் ஒன்றையும் உடையதாக மாட்டாது. உயிரில்லாத பொருளுக்கு உடையதாந் தன்மையில்லை. எஞ்சி நின்ற கடவுள் உயிர்கள் இரண்டில் உயிர்கள் சிற்றறிவுடைய எண்ணிறந்த பொருள்களாயும், கடவுள் பேரறிவுடைய ஒரு பொருளாயும் இருப்பதால் பேரறிவுடைய கடவுள் ஒருவனையே உடையான் என்று நாம் கூறலாம். ஆகவே பேரறிவுள்ள கடவுளாகிய ஒரு பொருளுக்குச் சிற்றறிவுடைய பல உயிர்களும் உயிரில்லாத பல உலகப் பொருள்களும் உடைமைப் பொருள்களாயுள்ளன என்பது பெறப்படுகின்றது. கடவுளுக்கு உயிர்களும் உயிரில்லாத பொருள்களும் உடைமைப் பொருள்கள் என்று பொதுவாய்க் கூறப்பட்டாலும் அறிவுடைய உயிர்ப்

பொருள்கள் அறிவில்லாத உலகப் பொருள்களினின்று பிரிக்கப்பட்டுச் சிறப்பாக அடிமைப் பொருள்கள் என்று கூறப்படுகின்றன.

3. இனி, கடவுளுக்கு உயிர்கள் அடிமைப் பொருள்கள் என்று கூறுதலில் அடங்கியுள்ள கருத்துக்களைப்பற்றிக் கருதுவாம். அடிமை என்ற சொல்லினது முதற்பொருள் (Primary Meaning) அடியிலுள்ள தன்மையாகும். ஒருடலில் அடி கீழேயும் தலை மேலேயுமிருத்தலால் அடிமையாயுள்ள ஒருவன் ஒரு தலைவனை உடையான் என்பதும், அத்தலைவனாற் காக்கப்பட்டு அவனுக்குள் அடங்கி நடப்பவன் என்பதும் தலைவனை அன்றித் தான் ஒன்றும் செய்தற்கு உரிமையும் வன்மையும் இல்லாதவன் என்பதும் முதலவாகிய கருத்துக்கள் பெறப்படுகின்றன. இந்தக் கருத்துக்களெல்லாம் சைவசமயத்திற் கூறப்படுகிற ஆண்டான் அடிமைத் தொடர்பு உண்மையில் அடங்கியுள்ளன. ஆண்டான் அடிமைத் தொடர்பு உண்மையைச் சிறப்பாக எடுத்துக் கூறுகிற சைவசமயமானது கடவுளது அருள் விளங்கி மலம் நீங்கப் பெற்ற பெரியார்களை அடியார்கள் என்றும் அடிகள் என்றும் கடவுளை ஆண்டான் என்றும் முதல்வன் என்றும் தலைவன் என்றுங் கூறுகின்றன. உடையான் என்ற சொல்லை வைணவர்களும் தங்கள் கடவுளாகிய திருமாலுக்கு நூல் வழக்கிலும் பேச்சு வழக்கிலும் பண்டைக்காலத்தில் வழங்கி வந்ததுமன்றி இப்பொழுதும் வழங்கி வருகிறார்கள். சைவர்களும் இக்காலத்துப் பேச்சு வழக்கில் "உடையவர் பூசை" "உடையவரை எழுந்தருளப் பண்ணல் வேண்டும்" என்ற சொற்றொடர்களை வழங்கி வருகிறார்கள். ஆகவே உடையான் உடையவன் உடையவரென்ற சொற்களை ஆண்டான் அடிமைத் தொடர்பு உண்மையைப் பின்பற்றி ஒழுகும் சைவர்களும் வைணவர்களுமே பண்டைக்காலத்திலும் வழங்கி வந்ததுமன்றி இக்காலத்திலும் வழங்கி வருகிறார்கள். இந்த இரண்டு சமயங்களைத்தவிர, பிற சமயங்களில் இந்த உண்மை கூறப்படாததால் அச்சமயிகள் இச் சொற்களைத் தனியே வழங்குதலில்லை. ஆனால் உடையான் என்ற சொல்லைப் பொருள், கைத்து, செல்வம் முதலிய சொற்க

ளுடன் சேர்த்துப் பொருளுடையான் கைத்துடையான் செல்வமுடையான் என வழங்குதலுமுண்டு. சில வேளைகளில் முன்னிற்கிற பொருட் பெயர் தொக்கி நிற்ப, உடையான் என்ற சொல்லே பொருளுடையான் என்ற பொருளில் வருதலுமுண்டு. இவ்வாறு ஒரு சொல்லே அதனைப் பேசுகிற மக்கள் பின்பற்றி ஒழுகிவந்த உண்மையைக் குறிப்பிடும் ஆற்றலுடையதாக நாம் காண்கிறோம்.

4. இனி, உடையான் என்ற தமிழ்ச்சொல்லுக்குச் சரியான வடமொழிச் சொல் சுவாமி (**स्वामि**) என்பது. சுவாமி என்ற சொல் இக்காலத்து, தமிழ் பேசுகிறவர்களெல்லாராலுங் கடவுளைக் குறிக்க வழங்கப்படுகிறது. சுவாமி என்ற சொல்லால் ஆண்டான் அடிமைத் தொடர்பு உண்மையை அதனைப் பேசுகிறவர்கள் நினைப்பதில்லை. அச் சொல் கடவுளுக்கு மாத்திரமன்றி மக்களைக் குறிக்கவும் வழங்கப்படுகிறது. உடையான் என்ற சொல் தமிழில் தனிமையாக, கடவுளைக் குறிக்க வழங்கப் படுதலன்றி மக்களைக் குறிக்க வழங்கப்படுதல் நூல் வழக்கிலும் பேச்சு வழக்கிலும் இல்லை. சுவாமி என்ற சொல்லானது இக்காலத்து முன்னிலையிலும் படர்க்கையிலும் பிராமண சாதி மக்களையும் துறவி வேடம் பூண்ட எல்லாச் சாதி மக்களையும் குறிக்க வழங்கப்படுகின்றது. இக்காலத்து, பிராமண சாதியிற் பிறந்தவர்களெல்லாரும் காவிவேட்டி தரித்தவர்களெல்லாரும் அவர்களுடைய அறிவு ஒழுக்கங்கள் முதலியன சிறிதும் கருதப்படாமல் சுவாமிகள் என்று தமிழ்ப் பொது மக்களால் அழைக்கப்படுகிறார்கள். அதனால் அச் சொல் அதனில் அடங்கியுள்ள உண்மைக் கருத்தை இக்காலத்தில் இழந்து விட்டது. இவ்வாறு சொற்கள் அவைகளைப் பேசும் மக்கள் வழங்கும் தன்மையினால் பொருள் மாறுதல்களை அடைகின்றன.

5. ஆளுகிறவன் என்று பொருள்படும் ஈஸ்வரன் (**ईश्वरः**) என்ற சொல்லும் சொத்தாக (அடிமையாக) உடையவன் என்று பொருள்படும் (**स्वम्**-சொத்து) சுவாமி என்ற சொல்லும் வடமொழி நூல் வழக்கில் காணப்படுதலானது சங்கராச்சாரிய

சுவாமிகள் காலத்துக்கு முன்னே பொதுவாக பிராமணர்கள் ஆண்டான் அடிமைத் தொடர்பு உண்மையைக் கூறும் சைவ சமயத்தை அனுட்டித்து ஒழுகி வந்தார்களென நமக்குப் புலப்படுகின்றது. அப்படியிருந்ததனுலேதான் அக்காலத்தில் பிராமணர்களிற் சிலர் சைவசமய ஆசிரியர்களாயும் சைவசமய நூலாசிரியர்களாயும் இருந்தார்கள். வேம்பத்தூர் மடத்தைப்போன்ற சில பிராமணச் சைவ மடங்களும் உளவாயின. அக்காலத்தில் சைவசமயம் "சூத்திரர் சமயம்" ஆயிருக்கவில்லை.

நால்வர்களும் கல்வெட்டுகளும்

[திருவாளர் அட்வகேட் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் எழுதியன]

(முன் ருஅகூ-ம் பக்கத் தொடர்ச்சி)

சோழ வம்சமானது 10-வது நூற்றுண்டில் பிரபலத்திற்கு வந்து 13-வது நூற்றுண்டு இறுதிமட்டும் செவ்வனே நிலைபெற்றிருந்து பிறகு நிலைகுலைந்தது. அவ்வம்சத்து மன்னரெல்லாம் சைவ பக்தியில் ஆழ்ந்து பல திருப்பணிகளைச் செய்தவர்கள். இராஜராஜர் 1 ஆரம்பித்த திருப்பணிகளை அவருக்குப் பின் வந்த ஒவ்வொருவரும் பெருக்கிக் கொண்டு வந்தார்கள். இதன் காரணமாகப் புது ஆலயங்களும் சமயா சாரியர்களின் பிரதிஷ்டை முதலான பல சின்னங்கள் ஏற்பட்டதோடு அவர்கள் அருளின தேவாராதிகளை ஆலயங்களில் ஓதுவிக்க ஏற்பாடுகளும் நாடெங்கும் நடந்தன. இக் கைங்கரியங்களை மன்னர்களே யன்றி, சிற்றரசர்களும் அரசாங்க அதிகாரிகளும், செல்வவான்களும், வியாபாரிகளும் எடுத்தாண்டார்கள். சைவ ஆசாரியர்களின் பெயர்களையும் தம் மக்களுக்கு இடவும் ஆரம்பித்தார்கள். இவ்விதம் பல வகைகளிலும் சமயம் பெருகிற்று.

இவைகளை நிரூபிக்கும் பல கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன. அவைகளைப் பாகுபடுத்தி அதனுல் தெரியும் குறிப்புகளை மாத்திரம் இங்கு எழுதுவோம்.

(a) நாயனார் பெயர்கள்.

(1) ஆளுடைய தேவர்—திருச்சி ஜில்லா வெஞ்சாமாக் கூடல் எண் 31 இது கொங்கு நாட்டு பாடல் பெற்ற தலம்.* சிலாசாசன இலக்கம்—149/1905.

(2) ஆளுடைய நாயனார்

(i) தென் ஆற்காடு-72. சிதம்பரம்—நடராஜர் கோயில். 280/13.

(ii) கோயமுத்தூர் 169. பெரிய பாளையம். குரக் குத்தளி என்ற வைப்பு ஸ்தலம்—வடபரிசார நாட்டு மன்னியூர் ஆளுடைய நாயனார் கோயில்—309/1908.

(3) ஆளுடைய பிள்ளையார்

(i) தென் ஆற்காடு 821. சித்தலிங்க மடம் வியாக்கிர பாதேசுர சுவாமி—418/09.

(ii) திருப்புத்தூர் 252, 196 (ராமநாதபுரம்) திருப்புத் தூர்—114/08

(iii) தஞ்சை—336, 316, 1156—திருவிடை மருதூர். சீகாழி—123/96.

(iv) புதுக்கோட்டை 243—குன்றக்குடி—39/09.

(4) திருஞான சம்பந்தர்

(i) தென் ஆற்காடு 61. சிதம்பரம் 269/13.

(ii) தஞ்சை 1156, 835 சீகாழி 123/26.

(iii) திருச்சி 854 காமரசவல்லி 95/14.

(iv) ராமநாதபுரம் 267 திருப்பத்தூர் 129/08.

(5) திருஞானம் பெற்ற ஆளுடைய பிள்ளையார்

(i) தஞ்சை 485 கோட்டூர் 448/12.

---

* இது முதல் குறிக்கப் பெற்றிருக்கும் எண்கள் எல்லாம் சிலா சாசனப் பரிசோதகர் வெளியிட்ட அறிக்கைகளில் காணும் எண்கள்.

(6) திருஞானம் பெற்ற பிள்ளையார்

(i) தஞ்சை, 487, 1126 கோட்டூர் 450/12.

(7) திருஞானம் பெற்ற நம்பி

(i) திருச்சி 108 இரத்னகிரி 176/14.

(8) திருஞான சம்பந்தனடிகள்

(i) தஞ்சை—இராஜராஜேசுரர் ஆலயம்.

ஆகவே, சுவாமிகளுடைய பெயர்கள் எத்தனை விதங்களாய் வழங்கப்பட்டு வந்தன என்பது இவைகளால் காணக் கிடைக்கின்றது.

(b) நாயனார் ஆலயங்களும் அவைகளுக்கு ஏற்பட்ட தானங்களும் அவற்றின் காலமும்.

(1) 1020 கி. பி. இராஜேந்திர சோழன் 7 ஆண்டு தஞ்சை ஜில்லா நன்னிலம் தாலுக்கா, திருவிடை வாயில் ஆலயத்து முன் வாசற் சுவற்றில் விடையபுரம் என்ற விருதராஜ பயங்கர புரத்து வியாபாரிகள் சொக்கக் கூத்தர், நாச்சியார், திருஞானம் பெற்ற நம்பி இவர்கள் விக்கிரகங்களை தாபித்து கோயில் பொக்கிஷத்திலிருந்து அவைகளுக்குப் பூஜை ஏற்படுத்துவதைப்பற்றி கூறுகிறது. இவ்வாலயத்தில் தான் சம்பந்தருடைய விடைவாயில் பதிகமும் செதுக்கப் பெற்றிருக்கிறது. மேலே காண்க.

(2) கி. பி. 1033. இராஜேந்திர சோழர் 20-ம் ஆண்டு திருச்சி திருமழவாடி வைத்தினாதர் கோயிலில் "திருமன்னி வளர" என்ற மகுடத்துடன் ஆரம்பித்துள்ளது. திருமாலரங்கன் என்ற திருப்பள்ளித் தாமப் பிச்சன் என்பாரும் அவன் மனைவியும் அக்கோயிலில் தாபித்திருந்த பிள்ளையார் திருஞான சம்பந்தரடிகள், திருநாவுக்கரைய தேவர், நம்பி ஆரூரனார் இவ்விக்கிரகங்களுக்குப் பிரார்த்தனையாக நெல்தானம் அளித்ததைக் குறிக்கிறது.

(3) கி. பி. 1069 மார்ச்சு 12-தேதி வீர ராஜேந்திரர் 6-வது [illegible] நாட்டுப் பிரம்மதேயமான திருக்கழுமலம்

ஆளுடைய பிள்ளையார் கோயிலின் தேவ கன்மிகள் திருநாரையூர் நாட்டு வேலூர் ஊரானுக்கு தம் நிலத்தைப் பரிவர்த்தனை செய்ததைக் குறிக்கிறது. 376/18.

(4) கி. பி. 1090 சீர்காழி குலோத்துங்கச் சோழன் 17-ம் ஆண்டு ஆளுடைய பிள்ளையார் ஆலயத்திற்குக் குலோத்துங்க சோழ சதுர்வேதி மங்களத்துச் சபையோர் நித்தியப்படிக்கும் நந்தவனத்திற்கும் ஆக ஒரு நிலத்தை தானம் கொடுத்தது 378/18.

(5) கி. பி. 1133 ஆலம்பாக்கம் (திருச்சி ஜில்லா) கைலாசநாத கோயில் கிழக்குச் சுவர் விக்கிரம சோழ தேவன் 15-வது ஆண்டு திருபுவன முழுதாளுடையாள் வள நாட்டுப் பொய்கை நாட்டுப் பிரமதேயமான மதுராந்தக சதுர் வேதி மங்களத்து சபையோர் ஆளுடைய பிள்ளையாருக்கு ஒரு நிலம் தானம் செய்தது. அந்த தானம் செய்த காலத்தில் அச் சபையோர் மதுராந்தக தேவர் மண்டபத்தில் சபை கூடி அவ்விதம் தானம் செய்தார்கள். மேற் கூறிய நாட்டின் பெயர் விக்கிரம சோழ தேவனுடைய இரண்டாம் அரசியான தியாக பதாகை என்ற திரிபுவன முழுதாளுடையாள் என்ற அரசியின் பெயரால் இடப்பட்டதென்று தெரிகிறது.

(6) 19-8-1135 குலோத்துங்க சோழன் II, 3-ம் ஆண்டு சீகாழி ஞானசம்பந்தர் ஆலயத்துச் சுவர், திருக்கழுமலத்துச் சபையார் ஆளுடைய பிள்ளையார் ஆலயத்திற்கு ஒரு நிலம் விற்றது 380/18.

(7) கி. பி. 1136 குலோத்துங்கன் II 4-ம் ஆண்டு சில விக்கிரகங்களை ஸ்தாபிக்கவும் சிதிலமான விக்கிரகங்களைப் புதுப்பித்துத் தாபிக்கவும் நிலத்தைத் தானம் செய்தது அதே கோயில் சுவர் 381/18.

(8) கி. பி. 27-1-1143 குலோத்துங்க சோழன் 10-ம் ஆண்டு சீகாழி ஞானசம்பந்தர் ஆலயம் வடச்சுவர் ஜயங்கொண்ட சோழவளநாட்டு ஆக்கூர் நாட்டு தலைச்சங்காட்டு சபையோர் சீகாழியில் மும்முடிச் சோழன் பேரம்பலத்தில் சபை கூடி ஆளு

டைய பிள்ளையார் ஆலயத்திற்கு நித்தியப்படிக்காகப் பூமி விற்றது.

(9) கி. பி. 1148 இராஜராஜ தேவ 2-ம் ஆண்டு 219-ம் நாள் கங்கைகொண்ட சோழபுரத்து ஒரு பக்தன் ஆளுடைய பிள்ளையார் ஆலயத்து முதல் பிரகாரத்து திருப்பணிக்காகப் பணம் கொடுத்தது. சீகாழி ஞானசம்பந்தர் ஆலயத்தில் கிழக்குச் சுவர்-388/18.

(10) கி. பி. 1158 இராஜராஜ தேவர் 12-ம் ஆண்டு ஸ்ரீகாழி ஞானசம்பந்தர் ஆலயம் வடச் சுவர் வீரசோழ நல்லூர் பரிக்கிரகத்துச் சபையோர்கள் திருக்கழுமலம் ஆளுடைய பிள்ளையார் ஆலயத்தில் உள்ள மங்கையர்க்கரசி நாச்சியார் கோயிலுக்கு நித்தியப் படிக்காக நிலம் விற்றது. இதனால் சம்பந்தர் ஆலயத்தில் பாண்டியன் தேவி மங்கையர்க்கரசி தேவியாருக்கும் ஆலயம் இருந்ததாகத் தெரிகிறது.

(11) கி. பி. 1182 இராஜாதி ராஜன் 11-ம் ஆண்டு. அதே ஆலயத்து தென் சுவர் வெண்மலித் தலைவனான ஆட்கொண்ட நாயகன் நத்தப் பெருமாள் என்பவன் ஆளுடை பிளளையார் ஆலயத்திற்கு நித்தியப் படிக்காக நிலம் தானம் செய்தது.

(12) 22-11-1195 குலோத்துங்கச் சோழன் III - 13-ம் ஆண்டு தஞ்சை ஜில்லா ஆச்சாபுரம் சிவலோக நாயகர் ஆலயத்து மேல் சுவர் பஞ்சவன் மாதேவிக்குச் சேர்ந்த சாத்த மங்கலம் என்ற சிவசரண சேகர நல்லூரில் ஆச்சாபுரத்து ஆளுடைய பிள்ளையார் ஆலயத்திற்காக அக்கிராமத்து அபய மாணிக்கச் சேரியான் ஒருவன் பூமிவாங்கிக் கொடுத்தது.

(13) கி. பி. 1205 குலோத்துங்கச் சோழன் III-27-ம் ஆண்டு சீகாழி ஞானசம்பந்தர் ஆலயம் வடக்குச் சுவர் ராஜராஜ வளநாட்டுத் திருவாலி என்ற எதிரிலிசதுர்வேத மங்கலத்துத் திருமுல்லை வாயிலில் சில நிலங்களை பல தடவைகளில் ஆளுடைய பிள்ளையார் ஆலயத்திற்காக வாங்கினவைகளின் விபரம் 383/18 அதன் கீழ் அதே ஆலயத்திற்கு நித்தியப்படிக்காக நிலம் தானம் கொடுத்தது கண்டிருக்கிறது. வருடம் இல்லை.

385/18-ல் ஆளுடைய பிள்ளையார் கோயிலின் மண்டபத்துத் தூண்களை ஆறனூர் இணைச்சையப்பன், ஆகாரவல்லவன் என்றவர்கள் கொடுத்ததாக அத்தூண்களில் எழுதப்பட்டிருக்கிறது.

386/18-ல் ஆளுடைய பிள்ளையார் கோயிலை சீர்ஜீர்ணோத்தாரம் செய்யவும் நந்தவனம் ஏற்படுத்தவும் திருவாக்கூரில் நிலம் தருமம் செய்தது கண்டிருக்கிறது. மேலும் 387/18-ல திருவிசை கற்பிக்கும் உபாத்தியாயர்களுக்காக பூதானம் கொடுத்தது கண்டிருக்கிறது. இவைகளைப் பற்றிக் காலம் எழுதப்படவில்லை. என்றாலும் குலோத்துங்கன் III சாசனத்தின் கீழ் உள்ளதால் அந்தக் காலத்தில்தான் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(14) கி. பி. 1206 குலோத்துங்கச் சோழன் III-28-ம் ஆண்டு திருவிடைமருதூர் மகாலிங்கச் சுவாமி ஆலயத்து முன் சுவரில் ஜெயங்கொண்ட சோழ வளநாட்டு திருவழுந்தூர் நாட்டில் குலோத்துங்கச் சோழன் பூண்டி என்கிற விக்ரம சோழன் சூரலூர் என்ற ஊரான் வாணாதி ராஜன் என்பவன் ஆளுடைய பிள்ளையாருக்குத் தானம் கொடுத்தது. இந்த சாசனம் வேறொரு விஷயத்தில் முக்கியமானது. சங்கம் தவிர்த்த குலோத்துங்கன் I 16-வது ஆண்டில் நிலத் தீர்வைக்காக நிலம் அளந்த விஷயத்தை இது கூறுகிறது. (289/1907).

(15) கி. பி. 1219 இராஜ ராஜன் III-2-ம் ஆண்டு 45-வது நாள் ஆச்சாபுரம் ஆலயத்து முதல் பிரகாரத்து வடச் சுவர்.

இராஜராஜ வளநாட்டு வெண்ணையூர் நாட்டில் பஞ்சவன் மகாதேவி என்கிற குலோத்துங்கச் சோழ சதுர்வேதிமங்கலத்து சபையோர் ஆளுடைய பிள்ளைக்கும், சொக்கியாருக்கும் நித்தியப் படிக்காகவும் கைலாசமுடையார் ஆலயத்தில் ஆயிரத்தெண்ணூற்று வன்சந்தி என்ற திருவிழாவில் அபூர்விகளுக்கு உணவு அளிக்கவும் நிலம் தானம் செய்தது 527-18.

(16) கி. பி. 1223 மாறவர்மன் சுந்தர பாண்டியன் 7-வது ஆண்டு. குன்றக்குடி-குன்றில் வெட்டியுள்ள கற்குகையின் முன் மண்டபத்தில் கற்சிலைகளுக்கு அடியிற் செதுக்கப்பட்ட ஒரு

சிதிலமான சாசனத்தில் ஆளுடைய பிள்ளையாருக்குப் பூதானம் செய்தது காணப்படுகிறது. 39/1909.

(17) கி. பி. 1225 இராஜராஜ III-9-ம் ஆண்டு மன்னார் குடி தாலுக்கா கோட்டூர் கொழுந்தீசுவர சுவாமி கோயில் சுவர்-கொழுந்தாண்டார் ஆலயத்தில் திருஞானம் பெற்ற பிள்ளையார் கோயிலுக்கு நாகமங்கலமுடையான் அம்பலவன் கோயில் கொண்டான் என்பவன் பணம் உதவியதும், ஒரு பிராமண ஸ்திரி நிலம் தானம் செய்ததும் கூறுகிறது. 450/1912.

(18) கி. பி. 1234 இராஜராஜன் III 18-ம் ஆண்டு அதே கோயிலில் கல்வெட்டு கொழுந்தாண்டார் ஆலயத்தில் தாபிக்கப் பெற்ற திருஞானம்பெற்ற ஆளுடைய பிள்ளையார் சந்நிதிக்குப் பூதானம் செய்தது (485/12).

(19) கி. பி. 1240 இராஜராஜன் III-14-ம் ஆண்டு 107-ம் நாள் சிதம்பரம் கோயில் முதல் பிரகாரம் வடச் சுவர் திருநீற்றுச் சோழ மங்கலத்து ஒரு நிலத்தை காளிங்கராயன் என்பான் ஆளுடைய நாயனார் ஆலயத்திற்காக 500 பலாப்பழம், 5000 மாம்பழம், 5000 வாழைப்பழம் தருவதற்காகத் தானம் செய்தது. அவ்வூர் சபையார் அந்நிலத்து வரியை நீக்கி ஊரார் அப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு ஒத்துக்கொண்டனர். அங்கு திருமந்திர ஓலை நெருடைச் சோழ மூவேந்த வேளான் என்பவன் 280/13.

(20) கி. பி. 1267=14-2-1267 இராஜேந்திர சோழன் III-28-ம் ஆண்டு பட்டுக்கோட்டை தாலூக்கா கோவிலூர் ஆலயம் மும்முடிச் சோழபுரத்து வியாபாரி தாபித்த திருஞானம் பெற்ற பிள்ளையார் நித்தியப்படிக்காக பூதானம்-161/1908

(21) கி. பி. 1270 மாறவர்மன் வீரபாண்டியன் 8-ம் ஆண்டு 57-ம் நாள் சிதம்பரம் பெரிய கோயிலில் கல்வெட்டு விக்கிரம பாண்டிய காங்கேயராயன் என்பவனுடைய உத்தரவுப்படி சேர்ந்த சாலியர் தனிமையில் குடியேற இடம் கொடுத்து அவ்வாறு குடியேறிய ஊருக்கு "தெரியவர நின்ற பெருமாள்புரம்" என்று பெயரிடப்பட்டது. அதற்காக அச்சாலியர்கள் சிவ

காம சுந்தரிக்கு நான்கு புதுச்சீலைகள் "திருப்புதியது" என்ற விழா நாளில் கொடுக்க வேணுமென்றும், திருஞானசம்பந்தருக்கு ஐந்து சிற்றாடைகள் கொடுக்கவேணுமென்றும் நிபந்தனை செய்யப்பட்டது. இவ்வரசனுக்கு "இராசாக்கள் தம்பிரான்" என்ற பெயர் இருந்தது. (269/1913)

(22) கி. பி. 1283=6-3.1283 ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் II-13-ம் ஆண்டு தென் ஆற்காடு சித்தலிங்க மடம் கோப்பெருஞ் சிங்கதேவன காலத்தில் "அறிந்தவன் பல்லவராயன்" என்பவன் திருக்கோயிலுக்கு அளித்திருந்த 2000 காசுகளை இவ்வூர் ஆலயத்து சிவப் பிராமணர்கள் தம்மிடம் வைத்துக்கொண்டு அதில் வரக்கூடிய வட்டியை ஆளுடைய பிள்ளையார் சந்நிதிக்கு நித்தியபடிக்குக் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்தது (418/1.909).

(23) கி. பி. 1296 விக்கிரம பாண்டியன் 13-ம் ஆண்டு திருப்பத்தூர் (இராமநாதபுரம் ஜில்லா) ஆலயத்து மடைப் பள்ளிச் சுவர்.

திருப்பத்தூர் கைலாசமுடையார் ஆலயத்தில் ஆளுடைய பிள்ளையார் சந்நிதிக்கு நித்தியப் படிக்குப் பணம் தானம் செய்தது. 114/1908.

இனி காலம் நிர்ணயிக்கக் கூடாதவை இரண்டு உண்டு.

(24) கோனேரின்மை கொண்டான் 21-ம் ஆண்டு திருவிடை மருதூர் ஆலயத்துச் சுவர் சாசனம் ஆளுடைய பிள்ளையாருக்கும் (சம்பந்தர்) ஆளுடைய நம்பிக்கும் (சுந்தரர்) நித்திய பூஜைக்கு நில தானம் செய்தது. 309/06

(25) கோனேரின்மை கொண்டான் 6-வது ஆண்டு 193-வது நாள். சீகாழி பிரமபுரேசுவரர் ஆலயத்துச் சுவர்.

உய்யக் கொண்டார் வளநாட்டு மாத்தூர் நாட்டில், மாத்தூர்கிராமத்து ஒரு நிலத்தை அரசனுடைய உத்தியோகஸ்தரில் ஒருவனான உய்யவந்தான் இராசவிச்சாதிரி என்பவனால் திருக்கோயிலில் ஸ்தாபித்த ஆளுடைய பிள்ளையார் சந்நிதிக்குப் பூஜைக்காகத் தானம் செய்தது 361/18.

(26) 14-9-1341 இராஜ நாராயணன் சாம்பவராயன் 4-வது ஆண்டு.

திருவாமாத்தூர் ஆலயம் சுவர் மூஞ்சி நதியின் வடகரையில் தாவனிப் பாக்கம் என்ற ஊரில் 4 வேலி கொண்ட ஒரு நிலத்தை சீகாழி சம்பந்தப் பெருமாள் நாயனார் சந்நிதிக்கு பட்ட விருத்திக்காகவும் கோயில் திருப்பணிக்காகவும் வரியின்றிப் பூதானம் செய்தது 48/1922.

மேலே எடுத்துக்காட்டிய கல்வெட்டுகளால் இராஜராஜ சோழருக்குப் பிறகு வந்த மன்னர்கள் வரிசையாக சைவாசாரியர்களுக்குப் பலவிதத்திலும் சமய முன்னேற்றமாகத் திருப்பணி செய்து வந்தார்கள் என்பது மிகத் தெளிவு. கி. பி. 1020 முதல் 1296 வரை, மூன்று நூற்றாண்டுகள் வரை, இப்பெரும் முயற்சியில் மன்னர்கள் சலிப்பின்றி ஈடுபட்டு வந்தார்கள் என்பது காலக் கிரமமாக எடுத்துக் காட்டிய கல்வெட்டுகளால் தெரியவரும். எந்தெந்த அரசர் எதுகாறும் சம்பந்தப் பெருமானுக்கு ஈடுபட்டார் என்பதும் வெளியாகிறது.

அரசர்கள்	கல்சாசன எண்	காலம்
இராஜேந்திரன்	2	1013—1045
வீர ராஜேந்திரன்	1	1062—1070
குலோத்துங்கன் I	1	1073—1118
விக்கிரம சோழன்	1	1118—1135
குலோத்துங்கன் II	2	1123—1146
ராஜராஜன் II	2	1146—1178
இராஜாதி ராஜன் II	1	1171—1186
குலோத்துங்கன் III	6	1178—1216
இராஜராஜன் III	4	1216—1248
சுந்தர பாண்டியன் I	1	1216—1235
ராஜேந்திர சோழன் III	1	1245—1267
வீரபாண்டியன்	1	1262—
சுந்தர பாண்டியன் II	1	1270—
விக்கிரம பாண்டியன்	1	1283—
கோனேரின்மை கொண்டான் (பட்டம்)	2	
இராஜ நாராயணன்	1	1337—

ஆகவே, சோழ வம்சத்தார் எல்லாரும் பாண்டியரில் பின் வம்சத்தார் சிலரும், சாம்பவராயன் ஒருவனும் இப்பெரும் திருப்பணியில் ஈடுபட்டிருந்தார்கள் என அறியலாம்.

மேலும் சம்பந்தப் பெருமான் அவதார ஸ்தலமாகிய சீகாழியில் ஒரு தனிச் சந்நிதி ஏற்பட்டும் அதற்காக 11 தான சாசனங்களும் அவைகளைக் குறிக்கும் கல்வெட்டுகளும் ஏற்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. மற்றும் சம்பந்தர் முத்தி யடைந்த தானமாகிய ஆச்சாபுரம் என்ற நல்லூர்ப் பெருமணத்தில் ஒரு தனி ஆலயமும் அதற்கு 2 கல்வெட்டுச் சாசனங்களும் ஏற்பட்டது அறியத்தக்கது. ஆகவே, அவதார முத்தித் தலங்கள் அந்நாளிலேயே மிகவும் முத்தி வாய்ந்த இடங்களாகக் கொண்டாடப் பெற்றும போற்றப் பெற்றும் வந்தனவென்பது அறியக் கிடக்கின்றது. இவையே யன்றி சிதம்பரம் பெரிய கோயிலில் இரண்டு சாசனங்கள் உள்ளது மிக அருமை, திருவிடைமருதூர், கோட்டூர், திருப்பத்தூர், குன்றக்குடி முதலான தலங்களிலும் சந்நிதிகள் ஏற்பட்டு சோழர் காலத்திலேயே நம் நாயனார் இடத்து அன்பு முதிர்ந்து இருந்தது போற்றத் தக்கது. இன்னமும் காணாத சாசனங்கள் பலவும் கண்டு பிடித்தால் சமயத்தின் வளர்ச்சி எவ்வாறு படர்ந்து வந்தது என்பதை நாம் எளிதில் அறியலாகும்.

அரசர்களே யன்றி, அரச உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும் நாயனாரிடத்து ஈடுபட்டுத் தானங்கள் செய்ததும், கிராம சபையோர்கள் தாமாகத் தானம் செய்ததும், பிறரைக் கொண்டு தானம் செய்வித்தும், தானம் செய்வதற்காக வரி நீக்கல், வரி இலகுவாக்குதல் முதலான சாதனங்களைச் செய்தும் சிவபத்தியைப் பெருக்கி யிருக்கிறார்கள்.

சோழ பாண்டிய அரசாட்சிகளுக்குப் பிந்தி வந்த விஜய நகரத்தார், நாயக்கன்மார் ஆட்சிகளில் சமயாசாரிகளின் பத்தி குறைந்துவிட்டதாகத் தெரிகிறது. அவர்கள் காலத்தில் ஆயிரக் கணக்கான கல்வெட்டுக்கள் இருந்தும் சமயாச்சாரிகளின் சாசனங்கள் இல்லாததைக்கொண்டு, அம்மன்னர்கள் இச்சமய அபிவிருத்தியில் ஈடுபட்டவர்கள் அல்லர் எனக் குறிப்பிடலாம்.

(C) நாயனுர் மடங்கள்

அவைகள் ஏற்பட்ட காலம், தானம் முதலியவைகள்:

1. திருச்சி ஜில்லா உடையார் பாளையம் தாலுக்கா, காமரசவல்லியில் கார்க்கோடேசுரர் ஆலயத்தில் சண்டிகேசுரர் கோயில் சுவர் சாசனம்.

ராஜேந்திர சோழதேவன் 12-வது ஆண்டு—1075 கி. பி.

ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக் காட்டுக் கோட்டம் வூரானும் ஆலயத்து பக்தனுமான குன்றன்கிழான் திருநாவுக்கரசு தேவனென்பவன் திருஞானசம்பந்தன் திருமடத்துக்குப் பூதானம் செய்தது. இதனுல் அவ்வூரில் திருஞானசம்பந்தர் மடம் இருந்ததும் சைவ பக்தர்கள் சமயாச்சாரியார் பெயர்களை தாம் வைத்துக்கொள்ளும் வழக்கம் கொண்டதும் பெறப்படும்.

2. தஞ்சை ஜில்லா, நன்னிலம் தாலூக்கா திருவீழிமிழலை வீழிநாத சுவாமி ஆலயத்து மேல் சுவர். இராஜேந்திர சோழதேவன் 23-ம் ஆண்டு—1036 கி. பி.

குலோத்துங்க சோழவளநாட்டு திருநாறையூர் நாட்டு இராஜராஜபுரத்தில் திருச்சத்தி முற்றமுடைய நாயனுர், திருக்காமகோட்டமுடைய பெரிய நாச்சியார் சந்நிதிகளுக்குக் கிழக்கிலுள்ள திருஞானசம்பந்தத் திருமடத்து திருச்சத்தி முற்றத்து முதலியாரின் சீடரான ஞானசிவம் என்பவர், திருவீழிமிழலை அழகிய சிற்றம்பலமுடையார் மடத்தில் ஒரு மடத்திற்குப் பூதானம் செய்தது. இதனுல் திருச்சத்தி முற்றம் என்ற பழைய ஊரில் ஒரு மடம் நமது நாயனுர் பேரில் இருந்தது என விளங்கும். (392/08).

3. திருச்சி ஜில்லா, காவிரிக்கு வடபால் திருப்பராய்த்துறை ஆதிமூல நாயனுர் ஆலயத்தில் நித்திய கல்யாணி சந்நிதியில் கிழ்ச்சுவர் இராஜராஜதேவன் 21-ம் ஆண்டு—1167. கி. பி. உத்தமச் சீலி சதுர்வேலி மங்கலத்து, கருமான்கரை என்ற பரகேசரி மங்கலத்தில் உள்ள ஒரு நிலத்தை திருவானைக்காவில்

உள்ள திருஞானசம்பந்தன் திருமடத்தில் உள்ள மாகேசுவர் களுக்கு உணவளிக்கப் பூதானம் செய்தல். இதனால் திருவா னைக்காவில் திருஞானசம்பந்தர் மடம் ஒன்று இருந்தது எனப் பெற்றோம்.

4. தஞ்சை ஜில்லா குறுக்கை வீரட்டானேசுவரர் ஆல யத்து சண்டிகேசுரர் சந்நிதியின் சுவர்:

குலோத்துங்கச் சோழன் III 38-ம் ஆண்டு கி. பி. 1216 (2-1-1216) ஜயங்கொண்ட சோழமண்டலத்து மணவிற் கோட் டம் பழையனூர் நாட்டு விடையூர் நென்மலி கிழான் திரு வேகம்பமுடையான் கண்டையாபரணன் என்பவன் திருஞான சம்பந்தர் குகைக்காக வரி இல்லாமல் நிலம் வாங்கப்பணம் உதவி யும் அதன் வட்டியிலிருந்து மடத்துச் செலவுகளைச் செய்யவும் தானம். இங்கே மடத்திற்குக் குகை என்ற பெயர் குறித்திருப் பது நோக்கத் தக்கது (233/17).

5. இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் ஆலயத்து மேல்சுவர்: மாறவர்மன் சுந்தரபாண்டிய I, 21-ம் ஆண்டு—கி. பி. 1237. தலையூர் நாட்டு செம்பொன் மாரிக்குச் சேர்ந்த மலைய மாணிக்கம் திருக்கானப் பேருடையான் என்பவன் திருப்புத் தூர் திருஞான சம்பந்த மடத்தில் வசிக்கும் ஆசாரியருள் ஒருவ ரான ஸ்ரீ கண்ட சிவனுருக்கு பூமி விற்றது. (129/08)

6. செங்கற்பட்டு ஜில்லா (சென்னைக் கடுத்த) திருவொற் றியூர் கோபுரத்து வலது புறச்சுவர்: விஜய கண்ட கோபால தேவர். 15-ம் ஆண்டு (2-9-1264) திருநாவலூர் வியாபாரி ஒரு வர் காட்டுப் பாக்கத்துப் படுவூர் நாடாழ்வான் என்பவனிடம் விலைக்கு வாங்கிய ஒரு நிலத்தை ஜயங்கொண்ட சோழமண்டலம் புழற்கோட்டம் என்ற விக்கிரம சோழவள நாட்டுத் திருவொற் றியூரில் இருந்த திருஞான சம்பந்த மடத்து மாகேசுவர்களுக்கு உணவளிக்கப் பூதானம் செய்தது. (238/1912)

7. மதுரை சோழவந்தானுக் கடுத்த தென்கரை மூல நாதர் ஆலயத்துச் சுவர்—மாறவர்மன் குலசேகரன் I. 14-ம் ஆண்டு, (21-9-1281) ஆலயத்தில் திருஞான சம்பந்தன் திரு

மடம் இருந்ததாகக் கூறுகிறது. இம்மடத்தின் தலைவர்கள் பாண்டரங்கவாணர் சந்தானத்து முதலியார்கள். அவர்களில் ஒருவர் பெயர் குலசேகரத்து ஆட்கொண்டானான உமையொரு பாகர் என்பது. (126/1910)

8. சீகாழி பிரமபுரீசுவரர் ஆலயத்து வடச்சுவர். 1313 சகம் அதாவது (29-12-1391). அவ்வாலயத்தில் திருஞான சம் பந்தன் மடத்திற்குப் பூதானம் செய்தது.

9. திருவேடகம் பத்திரிகா பரமேசுவரர் ஆலயம். கோனேரின்மை கொண்டான் காலம். திருஞான சம்பந்தன் மடத்து 20 தபசிகளுக்கு உணவளிக்கப் பூதானம் செய்தது. 681/1905.

ஆகவே இக்கல்வெட்டுகளினல் 1025 முதல் கொண்டே சம்பந்தருடைய மடங்கள் தாபிக்கப் பெற்று குருபீடங்களாக விளங்கின என்று தெரிகிறது. அப்பீடங்களிலே ஞானசிவம், ஸ்ரீகண்ட சிவம், உமையொரு பாகர் முதலான ஆசாரியர்கள் விளங்கினர்கள் என்றும் அம்மடங்களுக்குச் சிவபக்தர்கள் பூதா னங்கள் செய்து வந்தார்கள் என்றும் அறியக் கிடக்கின்றன. மேலும் சம்பந்தர் மடங்கள்,

(1) காமரசவல்லி
(2) திருச்சத்தி முற்றம்
(3) திருவானைக்கா
(4) குறுக்கை வீரட்டானம்
(5) திருப்புத்தூர்
(6) திருவொற்றியூர்
(7) தென்கரை
(8) சீகாழி

ஆகிய இந்த எட்டு இடங்களில் இருந்தன. தற்போது மதுரையில் ஞானசம்பந்தர் மடம் விளங்கி யிருப்பதை நாம் அறிவோம். இதைப் போல் முற்காலத்தில் பல இருந்தன என் பது இவைகளால் தெரிகிறது.

(d) நாயனார் பெயர்களை மக்கள் இட்டுக் கொள்வது.

1. திருஞான சம்பந்த நல்லூர். கி. பி. 1191 குலோத் துங்கச் சோழர் III, 14-ம் ஆண்டு தென் ஆற்காடு கூகையூர் ஸ்வர்ணபுரீசுவரர் கோயில் சாசனம். கூகையூர் பொன்பரப்

பின ஈசுவரமுடைய நாயனார் ஆலயத்தில் பங்குனித் திருவிழா நடத்தும் பொருட்டு பொன்பரப்பி நல்லூர் கிராமத்தையும், வடகரை இராஜ சிங்கவள நாட்டு உகளூர் கூற்றம் காற்பூண்டி என்கிற திருஞான சம்பந்த நல்லூர் என்ற கிராமத்தையும் வரியின்றிக் கொடுத்தது. (94/18)

2. திருஞான சம்பந்த வேளான் கி. பி. 1201 குலோத்துங்கன் III 24-ம் ஆண்டு. தென் ஆற்காடு திருக்கோயிலூர் திருவிக்கிரமப் பெருமாள் ஆலயத்துச் சாசனம்.

காண்டையூர் ஊராளி புகலூர்த்தேவன் என்கிற திருஞான சம்பந்த வேளான் என்பவன் இராஜராஜ வளநாட்டு மலாடு குறுக்கைக் கூற்றத்தில் திருக்கோவலூர் என்ற மதுராந்தக சதுர்வேதி மங்கலத்து திருவிடைக்கழி எம்பெருமானுக்கு நித்தியப்படிக்குப் பூதானம் செய்தது. (344/21)

விஷ்ணு கோயிலுக்கு சைவப்பேர்கொண்ட ஒருவர் தானம் செய்ததை நோக்குமிடத்து அக்காலத்திலிருந்த சமரச பாவனையைக் காட்டுகிறது.

3. சவணர் ஆளுடைய பிள்ளை. கி. பி. 1237. இராஜராஜ தேவ III 21-ம் ஆண்டு, நெல்லூர் ஜில்லா வெங்கடகிரி தாலூக்கா சாமலபல்லி கிராமம் விஷ்ணு கோயில் சாசனம்.

நாகப்புடோல் என்ற ஸ்ரீ இராஜ மல்ல சதுர்வேதி மங்கலத்து யாதவப் பெருமானுக்கு மூன்று அந்தி விளக்கு வைக்க ஒரு மாடையை சவணர் ஆளுடைய பிள்ளை என்பவன் தானம் செய்தது. (801/Nellore)

4. திருஞானசம்பந்த நம்பி: 13-4-1253 ஹொய்சல வீர சோமேஸ்வரன், 21-ம் ஆண்டு—திருச்சி ஜில்லா, இரத்னகிரி மலைமீதுள்ள ஹரான சேகரி ஆலயத்து வடசுவர்.

சிவபாத சேகர புரத்து வியாபாரி திருஞான சம்பந்த நம்பி என்பவன் திருக்காம கோட்டம் உடைய பெரிய நாச்சியாருக்குப் பூஜைக்காக 20,000 காசு தானம் செய்தது—176/1914

5. திருஞான சம்பந்த நாழி (அரசன் பெயர் அழிந்து

விட்டது). 16-ம்ஆண்டு. சைதாப் பேட்டை தாலூக்கா பாடி அல்லது திருவலிதாயம்—இக்கல் வெட்டில்—திருஞான சம்பந்த நாழி என்ற தானிய முகத்தலளவையைக் கூறியிருக்கிறது. (214/1910)

6. சொக்க ஞான சம்பந்தன், தேதியில்லை. தென் ஆற்காடு திருவாமாத்தூர் அபிராமீஸ்வரர் ஆலயம் சொக்க ஞான சம்பந்தர் மகன் செய்யத் திருமேனி மகன் திருக்காளத்தி உடையார் என்பவன் மண்டபங்கள் கட்டினது. (30/22)

இக் கல்வெட்டுகளினால் நமது நாயனார் திருப்பெயரை மக்கள் மாத்திரம் அல்லாது ஊருக்கும் அளவைக்கும் இட்டிருப்பது வியக்கத்தக்கது. அப்பூதியடிகள், திருநாவுக்கரசர் பெயரை தம் இல்லத்துச் சகல பொருள்களுக்கும், அளவைகள், நிறைகோல் முதலியவற்றிற்கும் இட்டாற்போல் இங்கும் நடைபெறுவது காண்க.

7. நாயனார் பெயர்கொண்ட ஈசுவரன். திருஞான சம்பந்தீசுரம் உடையார் கி. பி. 1244 இராஜராஜதேவ III - 28-ம் ஆண்டு—தஞ்சை திருப்பாலாற்றுறை - திருப்பாலாற்றுறை உடையார் ஆலயத்தில் கிழப்பிரகாரத்தில் நீலகங்கரையன் என்பவன் தாபித்த திருஞான சம்பந்தீசுர முடையார் சந்நிதிக்கு திருச்சிற்றம்பல நல்லூர் இராஜகம்பீர நல்லூர் என்ற ஊர்களில் நிலங்களைத் தானம் செய்தது. 437/1912.

ஆகவே நாயனார் பெயரால் தெய்வங்களும் தாபிக்கப் பெறுதல் காண்க. சோழர்கள் தங்கள் பெயரால் ஆலயமும் தெய்வமும் தாபிப்பதுபோல இதுவும் நடைபெற்றிருக்கிறது.

(e) நாயனார் பதிகங்களை ஓதுவித்தல்

சம்பந்தருடைய திருப்பதிகங்களை ஆலயங்களில் ஓதுதற்கு இராஜராஜர் கட்டளையிட்டதையும் திருவிடைவாயிலில் சம்பந்தர் திருப்பதிகத்தை 10-ம் நூற்றாண்டிலேயே பொறிக்கப்பட்டிருத்தலையும் முன்னமே கூறியுள்ளோம். இனி அக்காலத்திற்குப் பிறகு நாயனார் பதிகங்களை ஓதுதற்கு செய்யப்பெற்ற சாசனங்களை இங்குக் குறிப்போம்.—

1. கி. பி. 1073—அதிராஜேந்திரன் - 3-ம் ஆண்டு கும்பகோணம் தாலூக்கா, குகூர் ஆம்ரவனேசுவரர் ஆலயம் அரசன் சௌக்கியமடைவதற்காக மாம்பழமுடைய மகாதேவர் சந்நிதியில் **திருப்பதியம்** ஓதுதற்கு ஒருவர் பூதானம் செய்தது. 280/17

2. கி. பி. 1075—குலோத்துங்கன் I 2-ம் ஆண்டு வேதாரண்யம் கோயிலில் **திருப்பதியம்** பாட உரிமை அளித்தது—422/04.

3. கி. பி. 1225—மாறவர்மன் சுந்தரபாண்டியன் I 9-வது ஆண்டு திருநெல்வேலி கல்லிடைக்குறிச்சி நாகேசுவரமுடையார் ஆலயம் **திருமுறை** ஓதுதற்காகத் தானம் செய்தது. (92/07)

4. 22—7—1243. இராஜராஜ III. 28-ம் ஆண்டு. தஞ்சை திருக்காறவாசல் (திருக்காருயில்) அருமொழிதேவ வளநாட்டுப் புலியூர் நாட்டு மூவூர் கிராமத்தார், திருக்காருயில் ஆலயத்துத் திருக்கைக் கொட்டியில் **திருமுறை** படிக்கும் ஓதுவார்களுக்கு உணவு அளிக்கப் பூதானம் செய்தது.

5. கி. பி. 1285. ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் 9-ம் ஆண்டு. தஞ்சை திருவீழிமிழலை வீழிநாத சுவாமி ஆலயம்-நரசிங்கதேவன் காலத்தில் கட்டின திருக்கைக் கொட்டியில் **திருமுறை** ஓதுவதன்பொருட்டு பூதானம் செய்தது.

மேற்கூறிய கல்வெட்டுகளினுலே ஆலயங்களில் திருப்பதிகம், திருமுறை இவைகள் ஓதுவதற்காக ஏற்பாடுகள் செய்து வந்தது 10-ம் நூற்றுண்டு முதல் 13-ம் நூற்றுண்டு வரை அநுசரணையில் இருந்து வந்ததாகத் தெரிகிறது. ஏனைய சமயாசாரியார்களைப் போல் பெயர் குறிப்பிடாமற் போனபோதிலும் பொதுவாகத் திருமுறை திருப்பதிகம் என்றிருந்தாலும் சம்பந்தர் பதிகங்களை முதலில் சொல்லுவது சைவ சம்பிரதாய மாதலால் அவ்வாசிரிய ருடையதாகக் கொள்ளப்பட்டு இங்கு எடுத்தாளப் பட்டது. இதனை மற்ற நாயன்மார் பதிகங்களுக்கும் கொள்க.

பதிகங்கள், திருமுறைகள் தவிர ஏனைய சரித விஷயங்கள் கல்வெட்டுகளில் கிடைக்காதது நம் துர்ப்பாக்கியம் எனலாம். ஆச்சாபுரம் ஆலயத்து 527/18 என்று மேலே குறித்திருக்கும்

சாசனத்தில் ஆளுடைய பிள்ளையாருடன் சோக்கியார் என்ற பெண்மணியின் பெயர் சேர்த்திருப்பதை நோக்கி, சாசன ஆராய்ச்சியாளர் "பெரிய புராணத்தில் சம்பந்தர் மணம்செய்து கொண்டு தம்மோடு ஜோதியிற் கலந்துகொண்ட மணமகளான நம்பியாண்டார் நம்பி புதல்வியின் பெயர் காணுமல் இருந்த போதிலும் இந்த சாசனத்தைக் கொண்டு அப்பெண்மணியின் பெயர் சோக்கியார் என ஊகிக்கலாம்" என்கிறுர். இச்செய்தி ஆராயத்தக்கது.

மேற் சொல்லிய கல்வெட்டுகளின் ஆதாரங்களைக்கொண்டு நாம் முடிவாக ஒன்றைக் கூற முடியும். திருஞான சம்பந்த சுவாமிகள் 950 கி. பி. முதல்கொண்டு மூன்று நூற்றுண்டுக ளாக நாடு முழுதும் ஆலயங்களில் பிரதிஷ்டை செய்து பூஜிக்கத் தக்க வைபவம் பெற்றவராகக் கொண்டாடப் பெற்றதும், அவர் பெயரைப் பின்பற்றி பிற பெயர்கள் இடப்பெற்றதும், அவர் பெயரால் மடங்கள் நிர்மாணிக்கப் பெற்றதும், அவர் அருளிய பதிகங்கள் ஆலயங்களில் பாடப்பெற்றதும், முதலான காரணங்களைக் கொண்டு அவர் மகிமை நாடெங்கும் எம்மட்டும் பரவிக் கிடந்ததென்றும் அம்மட்டும் ஒருவருடைய மகிமை பரவுதற்குக் குறைந்தது மூன்று நூற்றுண்டுகளாவது அவசியம் என்றும் அதினுலேயே அவர் 7-ம் நூற்றுண்டில் அவதரித்திருக்க வேண்டும் என்றும் ஊகிக்க இடம் இருப்பதை நாம் அறியக் கூடும்.

கம்பன் கவிச்சுவை யமைப்பு

(ககூ-ம் பக்கத் தொடர்ச்சி)

[தோரமங்கலம். ஆசிரியர் அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்]

முற்கூறியவாறு உவந்து கூறும் சொற்கள் அவகுறியாகத் தீமைப் பொருள் பயந்தாற்போலவே கடிந்து கூறும் சொற்க ளும் உவப்பை உணர்த்தும் நற்பொருள் பயக்குமாறும் அமைந்து விளங்கும்படி நமது கவியரசர் தம் வன்மையைத

தெரிவிக்கின்றார். அவற்றுள் ஒன்றை மாதிரிக்காகக் காட்டுவோம்.

ஆரண்ய காண்டத்தில் விராதன் வதைப்படலத்தில், விராதன் சீதையைத் தாவி எடுத்துக்கொண்டு வானிற் பாய்கின்றான். இராமஇலக்குமணர்கள் அவனைத் தடுத்துப் போர்புரிய முனைந்து நிற்க, அதனைக் கண்ணுற்ற அவ்வரக்கன் அவர்களை நோக்கிச் சில கூறுகின்றான்: என வருமிடத்தில் நம் கம்பநாடர்,

> ஆதிநான்முகன் வரத்தின்எனதாவி யகலேன்
> ஏதியாவதுவு மின்றியுலகி யாவுமிகலிற்
> சாதியாதனவுமில்லை யுயிர்தந் தனனடா
> போதிர்மாதி வளையுந்தியினி தென்றுபுகல.

என்னும் அருமையும் பெருமையுமிக்க ஓர் செய்யுளை வழங்கியுள்ளார். (தனது ஆற்றல் மிகுதியை யுணராது இச்சிறுவர்கள் எதிர்த்து வீணில் உயிரிழக்கப் போகின்றார்களே என்னும் இரக்கத்தால் விராதன், தனது வரத்தின் பலத்தையும் ஆண்மைச் செய்கைகளையும், தன்னுடன் போர் செய்வதால் நேரும் அபாயங்களையும் இழப்பையும் விளக்கி அவர்கள் உய்ந்துபோவதோர் நல்வழியை உணர்த்துவானாயினன்.) "அட! ஆயுதமேந்தியவனே! என்னை யாரென்று நினைத்தனை! யானோ நான்முகனாகிய பிரமன் தந்த வரப்பிரசாதத்தால் இவ்வுடலினின்றும் ஆவி நீங்கப்பெறேன். நான் உன்னை நோக்கும்போதே எனக்கஞ்சி உன்னுடலில் உயிர் உளதோ இலதோ என்னும் ஐயமுண்டாம்படித் தோன்றுகின்றனையே! அந்தோ! அளியை! நீ அஞ்சற்க, மின்னற் கொடிபோல் வாளாகிய இவளை இங்கு யான் பெறக் கொணர்ந்துதவிய நன்றியின் பொருட்டு உன் உயிரை உனக்கு நல்குகின்றேன். இவளை என்னிடமேவிடுத்து மகிழ்வுடனே திரும்புங்கள். இல்லையெனின், இம்மாதை இழப்பதோடு நில்லாது இவள்போன்ற வேறொருத்தியை மணந்து இன்னும் சில நாள் இவ்வுலகில் வாழ்ந்து இன்பம் நுகரும் உலகசுகத்தையும் ஒருங்கே இழந்து அவிமே இறக்க நேரும்." என்று சொல்ல, என்றொரு பொருளும், மற்று, ஏது + யாவதுவு

மின்றி + உலகு யாவும் + ஓகலில் + சாதியாதனவுமில்லை, எனக் கண்ணழித்து, என் ஆண்மையை யறியீர்: கூறக்கேண்மின்! யான் பிறர்க்கு இன்னல் தருவதற்கு ஓர் காரணம் வேண்டு மென்பதில்லை. அவர்களுடைய தீவினை வயத்தால் என் எண் ணம் அவர்களை வருத்தவேண்டும் என்று தூண்டுமாயின் அவ் வழியே நடந்து அவர்களைத் துன்புறுத்துவேன். என்மேல் இவ்வுலகிலுள்ள எல்லா வீரர்களும் படையெடுத்து வரினும் என் தோள்வலியால் எண்ணிய வண்ணம் சாதித்தே தீர்ப்பேன். யான் சாதியாத பெருங் காரியங்கள் யாதுமில்லை. என்று வேறோர் பொருளுங் கூறும்படி யமைந்துள்ளது இக்கவி.

இங்ஙனம் கடிந்து கூறும் விராதன், இப்பிறவியில் அரக்க னாயினும் முற்பிறப்பில் ஓர் இயக்கனாயிருந்து சாபம் காரண மாக வந்தவனாதலின் அவன் கூறும் இரவலில் நன்மை தொடர்ந்து குறிப்புப் பொருளும் தரவேண்டுமென்று கவிவேந் தர் கருதினாராக, அங்ஙனமும் பொருள் தோன்றும்வண்ணம் இச்செய்யுள் எழுந்தது "உலக முதல்வனாய் நின்ற ஆதிபக வனே! அடியேன் தங்கள் முன்பு வந்ததால் இனி என் உயிர் பிறவிக்கடலில் அகன்று துன்பமுறாது திண்ணமே. யானோ ஒரு காரணமுமின்றி உலக மக்களைப் பகைத்துச் செய்யாத தீங்குகள் இல. (தீங்குகள் எனக் குறிக்கப்பட்ட அவ்வளவும் செய்த பாவியேன்) அத்தகையேன் எனதாவியைத் தங்கள் உடைமைப் பொருளாகத் தந்து சரண்புகுந்தேன். இனி நீங்கள் இம்மாதை இனிது நடாத்திக்கொண்டு சுகமே போவீர்களாக. நானும் என் சாபம் நீங்கி மகிழ்வுடனே பரமபத நாட்டிற்குச் செல்கின்றேன்." என்று சொல்ல, என்னும் பொருளும் இதில் அமைந்திருப்பதை அறிக. காண்மினோ! கம்பர் வாக்கின் நயம்! வெறுப்பக் கூறும் சொற்கள் உவப்பைத் தோற்றவும், உவப்பக் கூறுவன தீமை சுட்டவும் வேண்டியவாறு செய்யுட்கள் எளி தின் அமைய அவர்க்கு வாய்த்த நல்லூழ் பிறிதொருவர்க்குத் தவம் கிடப்பினும் வாயாதாம்.

பிறர் கூறும் நியாயமான கேள்விகளுக்குத் தக்க விடை

கூறுதற்குத் தமது தவறுபட்ட போலிக் காரணங்கள் ஒவ்வா தாயினும், சொல்லுந் திறமையால் பொருந்துமாறு மெய்ப்பித்துச் சாதிக்கும் ஆற்றல் சிலரிடம் காணபபடுகின்றதன்றோ? அதுபற்றியே, "பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே" என ஆன்றோரும் அறை வாராயினர். இஙஙனம் போலிக் காரணங்களை மெய்யாக நிரூபித்துக் கேட்போரை மயக்கவல்ல கதா பாத்திரங்களைக் கம்பர் நமக்குக்காட்டுகின்றார். அத்தகையார் பெண்ணொருத்தியும் ஆண் ஒருவருமாகத் தோன்றுகின்றனர்.

அயோத்தியா காண்டத்தில் மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் :—இராம பிரானுக்கு முடிசூட்டப் பெறும் செய்தியைத் தெரிந்த கூனி யென்பாள், கைகேயியின்பால் ஓடிவந்து தசரதன் செய்த வஞ்சனையைப் புகன்று, நின்மகன் பரதனுக்கு முடி சூட்டுமாறு முயல்க, என்று பரிந்துகூற, அதுகேட்ட திருந்திய உள்ளமுடைய கைகேயி, அவளைச் சினந்து, "........நிறந்திறம்பினும் நியாயமே திறம்பினும் நெறியின்—திறந்திறம்பினுஞ் செய்தவந் திறம்பினுஞ் செயிர்தீர், மறந்திறம்பினும் வரன்முறை திறம்புதல் வழக்கோ ?" இராமன் மூத்த குமாரன் அவனுக்கே முடிசூடும் உரிமை உண்டு, அது என்றும் எங்குமுள்ள வரன் முறை. ஆதலால் பரதன் இளையனாகலின் நீ கூறுதல் கூடாது என மறுத்து விட்டனள். தன் எண்ணம் பலியாமற் போவதை யுணர்ந்த கூனி, அவட்கு, இளையவன் முடிசூடலும் தகுதியும் வழக்கமும் உடையதே யாகுமென்று பொய்க்காரணங் கொண்டு போதித்துச் சாதிக்கின்றாள்.

மூத்தவற் குரித்தர செனின் முறைமையி னுலகங்
காத்த மன்னன் னிளையனன் றோகடல் வண்ணன்
ஏத்து நீண்முடி புனைவதற் கிசைந்தன னென்றால்
மீத்தருஞ் செல்வம் பரதனை விலக்குமா றெவனோ?

அம்மா! கேட்டி! 'மூத்தவனிருக்க இளையவன் முடிசூடல் வழக்கமன்று? என்பையாயின், எனக்கோர் ஐயப்பாடு நிகழுகின்றது. அஃதாவது, நம் சக்கரவர்த்தியாராகிய தசரதரைவிட இராமன் மூத்தவனோ? என்று (தகப்பனுக்கு

மகன் மூத்தவனாதல் எங்ஙனம்?) வயதில் மூத்த பிதாவின் கண் முன்னே அவரின் இளைய இராமன் முடிசூட உடன் பட்டானென்றால் அவ்வாறே. மூத்த தமையனாகிய இராமன் முன்பு இளையோனாகிய பரதன் மகுடம் புனைதலில இழுக் கென்னை? என்று துணிந்துரைக்கின்றாள். இங்கே, மூத்த வன் இளையவன் என்பது உடன் பிறந்தோரைக் குறிப்ப தாகவும், அம்முறையில் தான் கூறும் காரணம் முற்றும் முரணு மென்று கருதி, அம்முறைமையைப் பொதுவாகக் கொண்டு தந்தைக்கும் மைந்தனுக்கும் மாற்றிக் குழப்பி, தகப்பனிருக்க மகன் முடிசூடலில் மூத்தவன் இளையவன் என்னும் முறை மாறுபடுவதைக் குறித்துச் சமாதானம் காட்டித் தன் வழியே கைகேயியைத் திருப்பி விட்டனள் அக்கூனி; என அவள் சொற்றிறத்தைத் தமது மதிநுட்பஞ் செறிந்த சொல்வன்மை தோன்ற விளக்குகின்றனர். பின், சுந்தர காண்டத்தில், இராம னால் ஏவப்பட்டு இலங்கைபுக்குச் சீதையோடு கூறுவன கூறித் தெருட்டி அவளுரைத்தவற்றை மனங்கொண்டு திரும்பி அசோக வனத்தை அழித்து அட்சய குமரன் முதலான வீரர் களைக் கொன்று இந்திரசித்தன் பாசத்தாற் பிணிப்புண்டவனாக நடித்து இராவணன் திருமுன்பு வாலை வளைத்துச் சுற்றிய உயர்ந்த அணைமேல் வீரம் பொலிய விளங்க வமர்ந்த அநுமனை நோக்கி, இராவணன், நீ யாவன்? என, யான் இராமதூதன் என்று கூறிய ஆஞ்சநேயன், "தூதனாயின் வந்து தூது கூறு வதன்றோ முறை. அங்ஙனம் செய்யாது, அசோக வனத்தை அழித்தும், என் படைத்தலைவரையும் மகனையும் கொன்றும் பின் பிடிபட்டு இங்கு வருதல் தகுமோ? என வினவிய அவ் விராவணற்கு விடை பொருந்தக் கூற முயல்கின்றவன்,

காட்டு வாரின்மை யிற்கடி காவினை
வாட்டினே னெனைக் கொல்ல வந்தார்களை
வீட்டி னேன்பின்னு மென்மையி னாலுன்றன்
மாட்டு வந்தது காணு மதியினால்.

என்று மொழிவானாயினன்.

அரக்கர் அரசே! நன்று வினாவினை; யானோ இந்நகர்க்குப்

புதியவன். உன்னை என்போன்ற எளியோர் காணல் துணை யின்றி அமைவதன்று. நின்னை எனக்கு அறிமுகம் செய்விக்க உதவி வேண்டியும் பெருமையால், அதனைப் பெறுதற்குத் தலைக் கீடாக எதிர்தோன்றிய அசோக வனத்தை அழிக்கத் துணிந் தேன்; அங்குத் தலைப்பட்டவர்கள், நீ யாவன்? ஏன் இவ் வனத்தை யழிக்கின்றனை யெனக் கேட்டாரிலர். என்னோடு போர் புரிந்து என்னை வதை செய்ய முனைந்து சினந்து பல் வகைப் படைக்கலங்களை வழங்கிப் பொருவாராயினர். அட! என்னை வாய்ப்பிறப்பு விசாரித்து இன்னான், இன்ன காரியத் துக்கு வந்தானென்று அறியாது கொல்லவந்த இவருடன் என் வரலாறு கூறுமுன் தலை தடுமாறிப் போமே என்ற அச்சம்பற்றி என் ஆருயிர்காக்குந் தலைக்கடனை மேற்கொண்டு பொருதாரோடு பொருதேன். அவர்களின் ஆராயாமையும், பொறுமை யின் மையும் மடமையுமே கூற்றாக நின்று அவர்களைக் கொன்றது. நல்ல வேளையாக, நின்மைந்தன் இந்திரசித்து, என்னை மிக மெல் லிய பாசமொன்றால் வணக்கிப் பிணித்து நின்பாற்றந்து, "............சிவனெனச் செங்கணா னென்னைச் சேவகன்—இவ னென உனக் கெடுத்துக் கூறி அறிமுகப்படுத்தி உதவி புரிந்தன னாதலானும், நீயும், என் வரலாறு கூறுகென, வினவுதலானும் என் கருத்தை யிப்போது சமயம் வாய்த்ததாகலின் வந்த காரி யத்தை வாய்விட்டுச் சொல்லலானேன். உனது சீரிய கூரிய மதிவன்மையால் என் உண்மையை நேர்பெற அறிவாயாக" என்று மொழிந்து தன்மேற் குற்றமில்லாதவாறு காரணங் கற் பிக்கின்றான், எனக் காட்டுகின்றார். இங்ஙனம் அவ்வக் கதா பாத்திரங்களின் கூற்றுக்களை அவரவர் கருத்தோடு துவக்கிக் கற்போர் அஃது நியாயமே என்று கொள்ளுமாறு திறம்பட மெய்ப்பித்துக் காட்டும் கவிச் சக்கரவர்த்தியின் புலமை தமிழுல குள்ளளவரையும் பாராட்டப் படுவதோர் தலைப்பாடுடையதே யாமென்க.

(தொடரும்.)

சென்ற திங்கள் வெளியீட்டில் கண்ட பிழைதிருத்தங்கள்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
554.	18.	தொடங்கி	தொடங்கினும்
556.	18.	உருவம் போலிகள்	உருவப் போலிகள்
558.	27.	வரைந்திருக்கின்றன	வமைந்திருக்கின்றன
559.	2.	அவற்கு	அவட்கு
,,	16.	கிட்டுமெனின்	கிட்டுமென்பதால்

என்று திருத்தி வாசிக்க.

கருமை

(545-ம் பக்கத் தொடர்ச்சி)

(திருக் கபசம் எழுதியது)

ஆண்டின் ஒளிப்பகுதியு மிருட்பகுதியு மாகிய ஞாயிற்றின் வடதிசைச் செலவும் (உத்தராயனம்) தென்றிசைச் செலவும் (தக்ஷிணாயனம்) முறையே இயக்கத்திற்குந் தூக்கத்திற்குங் காலங்களா யமைந்திருப்பதைப்பற்றி இவ்வுரையின் முந்திய பகுதியில் விரித்துரைக்கப் பட்டது. ஒளியுமியக்கமு முயிரு மிணைந்து நிற்பதையும், இருளுந் தூக்கமு முயிரின்மையு மொற்றுமைப் படுதலையும் வேறொரு வகையால் தெளியக் காணலாம். ஞாயிற்றைச் சுற்றிவருகின்ற நிலவுருண்டையின் நடுப் பகுதியில் வேறிடங்களைக் காட்டிலு மிகுந்த வொளிபடுகின்றது. ஏனெனின், பகலோன் கதிர்கள் நேராக வீண்டு வந்து படுகின்றன. நிலவுருண்டையின் படங்களில் பரிதிக்கு நேராக விருக்கின்ற இந்நடுப் பகுதியைக் காட்டுதற் கொரு தடிப்பான கோடிட்டிருக்கும். இது வையகத்தை வடபாதி, தென்பாதி யென விருசரி பிரிவாய் வகுத்தலின் நடுக்கோடு (Equator) எனப்படும். இந் நடுக்கோடு தென்னமெரிக்காவின் மேற் பாகம், ஆப்பிரிக்காவின் மையம் ஆகியவற்றினூடே யோடி, இந்தியாவிற்குத் தெற்கே சிறிது சேய்மையிற் செல்கின்றது. செங்கதிரோன் சாலக் காய்கின்ற விப்பகுதியில் நிலைத்திணை யுயிர்களு மியங்குதிணை யுயிர்களு மிகப் பெருகித் தோன்றுகின்றன. உயிர்நூல் வல்லார் தமதாராய்ச்சியைச் செவ்வன நிறைவேற்ற நடுக்கோட்டிலுள்ள நாடுகளுக்கே செல்கின்றனர். இக்கோட்டை விட்டு வடக்கே செல்லச் செல்லச் சிறிது சிறிதாய் வெப்பங்குறைகின்றது. வெப்பமு மியக்கமு மொன்றே. வெப்பங் குறையக் குறைய உயிர் வகைகளின் பெருக்கஞ் சுருங்கிக் கொண்டே வருகின்றது. கடைசியில் வையகத்தின் வடவிறுதியை (உத்தர துருவம்) அணுகுங்கால், திமிங்கிலம், சீல் (Seal) என்ற நீர் வாழ் விலங்குகளும், வெண்கரடி (Polar

Bear), பனிமான் (Rein-deer) ஆகிய நிலவிலங்குகளும், இரண்டு மூன்று பறவைவகைகளும், நாலடி யுயரமேயுடைய சிறிய மக்களுந் தவிர வேறொன்றுங் காணப்படுவதில்லை. இதற்குமேல் வடக்கே உறைபனிப்பாழ் நிலமே யுளது. நடுக் கோட்டை விட்டுத் தென்முகஞ் சென்று பார்க்கிலும், ஏறக் குறைய முற்கண்டவாறே உயிர்களின் வகையுந் தொகையுஞ் சுருங்குகின்றன. இங்ஙனமே, வெப்ப மிகுந்த மலைகளினடிப் பாகத்திற் பலவகையுயிர்களுள. உயர வேற வேறத் தட்பம் பெருகுவதா லுயிர்வகைகள் குறைகின்றன. இமய மலையின் முடிகளில் வையகத்தின் வடவிறுதியிலுந் தென்னிறுதியிலு முள்ள குளிரு முறைபனியு முயிர்ச்சுருக்கமுந் தோன்று கின்றன. ஒளியும் வெப்பமு முயிரு மொன்றை யொன்று பிரியாத் தன்மைய வென்பதிதனு லினிது விளங்குகின்றது.

நிலவுருண்டை சுழன்று ஞாயிற்றைச் சுற்றிவரு நெறியில், சில நிலைகளில் மிகுந்த வெளிச்ச மதன்மேல் வீசுகின்றது; சில நிலைகளிற் குறைந்தவொளி யதன்மேற் படுகின்றது. மிகுந்த வொளி வீசுங்காலத்தை நாம் வேனிலென்று சொல்கின்றோம்; குறைந்த வெளிச்சம் படுகின்ற காலத்தைக் குளிர்காலமென்று சொல்கின்றோம். நிலவுருண்டை நேராக நின்று ஞாயிற்றைச் சுற்றாது, சிறிது சாய்ந்து சுற்றுவதால், எல்லா விடங்களிலு மொரேயளவான வேனிலுங் கூதிரு மிருப்பதில்லை. நடுக்கோட்டை நீங்கி வடக்குந் தெற்குமகன்று போகப்போகக் குளிருடனிருளு மதிகரிக்கின்றது. வையகத்தின் வடவிறுதியில் ஆறு திங்களொரே பகலாகவும், ஆறு திங்களொரே இரவாகவும், ஆண்டிற்கிரு பெரும் பொழுதுகளேயுள. வியத்தகு மிந்நிகழ்ச்சியை நாம் உளத்திற் கோடலு மரிது. விசும்பிலுளார்க்கு ஓராண்டு ஒரு நாளாகு மெனுங் கொள்கை யொன்றிந் நாட்டிலுளதென்று முன்னரெடுத்துக் காட்டப்பட்டது. இக்கொள்கையின்படி, ஆறு திங்கட் பகலு மிரவு முண்டாகின்றன. ஆயின், இந்நாட்டிலுள்ளவர் நுண்மதியாலோ, நுகர்ச்சியாலோ வடவிறுதியின் ஆறு திங்கட் பகலையு மிரவையும் பற்றி அறிவுடையவரா யிருந்தாரென்று நாம் கருதவேண்டும். ஆறு திங்களிரவைக்

கருத்திற் கொள்ளக்கூடிய, அல்லது, நுகர்ந்த மக்கள், இருளையுங் கருமையையு மெவ்வாறு வெறுப்பரென்பது சொல்வதற்கெளிதன்று. நமது நாட்டில், ஆண்டினிருட் பகுதி நீங்கி, ஒளிப்பகுதி தொடங்குங் காலத்தை மிக நுட்பமாகவரையறுத்து, அதை மகிழ்ச்சியுடன் மக்கள் வரவேற்கின்றனர். தெய்வங்களின் பொருட்டுக் கொண்டாடப்படும் விழாக்களிற் பெரும்பாலன ஒளிப்பகுதியில், அல்லது, அதற்குச் சற்று முன்பின் நடை பெறுகின்றன. நிலவுமறை நாளிலும் (அமாவாசை) திங்களின் நிழல் ஞாயிற்றை மறைக்கு நேரத்திலும் (சூரிய கிரகணம்), வையகத்தின் நிழல் திங்கள் மேல் விழும் பொழுதினும் (சந்திர கிரகணம்) இந்துக்களென்று தம்மைச் சொல்லிக் கொள்வோர் உணவு மறுக்கின்றனர். மேற்குறித்த நிகழ்ச்சிகளெல்லா மிருளின் பகுதிய வாதலால், இருளை யஞ்சியே இவ்வழக்கங்கள் எழுந்தன வென்று நினைத்தல் கூடும். நினைப்பின், நீண்டவிருள் குடிகொள்ளக்கூடிய வொரு நாட்டினிருந்து இந்துக்களென்போர் வந்திருக்க வேண்டுமென்ற கருத்து எழுகின்றது. இதற் கேற்ப, வையகத்தின் வடவிறுதியிலிருந்து ஆரியர் இந்தியாவிற்கு வந்தனரென்ற கொள்கையைச் சிலர் தழுவுகின்றனர். வையகத்தின் வடவிறுதியி லுயிர் தழைத்தோங்குதற் குரிய நிலைமைகளில்லாமையால், விலங்குகளு மங்குத் தோன்றுவதில்லை; இங்ஙனமாக, தொன்மையில் மக்களங்கிருந்தாரெனலும், ஆண்டிருந்தவர்கள் தென்றிசை நோக்கி வந்தாரெனலும் பிழைக் கூற்றென்று மொழிவோருளர். அறிஞர் மாணிக்க நாயக்கர், நடுக்கோட்டை யடுத்திருந்த, கடலாற் கொள்ளப்பட்ட பண்டைத் தமிழ் நாட்டில் மக்கட் கூட்டமுதலிற்றோன்றி, பெருகப் பெருக வடக்கே சென்று, வடவிறுதியின் தாங்கொணாக் குளிரையு மிருளையுமஞ்சி, மீண்டுந் தெற்கு நோக்கி வந்தது, என்ற கொள்கையை நாட்டுதற்குப் பல சான்றுகள் கூறுகின்றனர். ஆராய்ச்சியில் விருப்ப முடையோர் கருத்தை இத்தகைய கொள்கைகளீர்க்குமென்பது ஒருதலை.

(தொடரும்)

தஞ்சை சீனிவாச பிள்ளை

தமிழ் வரலாற்றின் ஆராய்ச்சி

[திரு. தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் B. A., எழுதியது]

(முன் ௬௧அ-ம் பக்கத்தொடர்ச்சி)

முத்தமிழ்

சங்கந் தோன்றியபின்னர் முத்தமிழிலும் நூலும் செய்யுளும் இயற்றபபட்டன என்கின்றீர்கள். நமது நாட்டுச் சாதாரணப் புலவர்கள்போல் தாங்களும் மூன்றுவகைத் தமிழ் இருந்தன என்று எண்ணுகின்றீர்கள்போலும். முத்தமிழ் என்பதன் கருத்து அதுவன்று; அது தமிழியல், தமிழிசை, தமிழ் நாடகம் என்பதாம். இவற்றின் பொருள் தமிழ்மொழியினிலக்கணம், தமிழருடைய இசை, தமிழருடைய கூத்து என்பதாம். இவைகள மூன்றும் ஆரியமொழியினிலக்கணத்துக்கும், ஆரியருடைய இசைக்கும், ஆரியருடைய கூத்துக்கும் வேறு. அவ்வேற்றுமை தெரிவிக்கவே அவை தமிழியல், தமிழிசை, தமிழ்க் கூத்து எனப்பட்டன. அகததியம் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் மூன்று தமிழையும் கூறும் என்னும் தொல்லாசிரியருரையான் இது நன்கு புலனும். அகத்தியம் மூன்று வகைத் தமிழில் எழுதபபட்டதன்று; ஒரே தமிழில் எழுதப்பட்டு இயல், இசை, நாடகம் என்னும் மூன்றிலக்கணமுங் கூறுவது. அங்ஙனமே, இசைத்தமிழ் நூல், நாடகத் தமிழ் நூல் என்பன முறையே இசைத்தமிழிலும் நாடகத் தமிழிலும் எழுதப்பட்டனவல்ல—அப்படிவேறு இருவகைத் தமிழில்லை—அவை முறையே தமிழிசையினிலக்கணமும் தமிழ்க் கூத்தினிலக்கணமுங் கூறுவன. இஃது இப்போது இறவாதொழிந்துள்ள அந்நூல்களானும் சிலப்பதிகார உரையில் எடுத்துக் காட்டப்பட்ட அந்நூற் சூத்திரங்களானுமறியப்படும். பதினொன்றும் பக்கத்தில் தாங்கள் எடுத்துக் காட்டிய பேராசிரியருடைய வசனங்கட்கும் இதுவே பொருளாகும். இயற்றமிழ் என்பதற்குத் தமிழ்மொழியினிலக்கண மென்பதே பொருளா

தலை—"இவ்வியலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுளை அடிகள் செய்கின்ற காலத்து இயற்றமிழ் தொல்காப்பிய மாதலானும் பிறர் கூறிய நூல்கள் நிரம்பா விலக்கணத்தனவாதலானும் அந்நூலின் முடிபே இதற்கு முடிபென்றுணர்க" என்னும் அடியார்க்கு நல்லார் கூற்று நன்கு தெரிக்கும்.

இசைநாடகத் தமிழ் நூல்கள்

பதினேழாம் பக்கத்துக் கூறிய இசைநாடகத் தமிழ்நூல்களுள் சச்சபுட வெண்பா, தாள சமுத்திரம், சுத்தானந்தப் பிரகாசிகை முதலிய பழந்தமிழ் நூல்களல்ல. அவற்றின் பெயரே அவை ஆரியக் கலப்பின் பின் தோன்றின என்பதை யுணர்த்தும். பஞ்ச பாரதீயம் என்பது ஒரு பழைய நூல்; ஆயினும் அதுவும் ஆரியக் கலப்பின் பின் தோன்றினதே. பதினறு படலம், சொல்லகத்தியம் என்பவற்றின் பெயரும் யான் கேட்டறியேன். நாடகவியல் என்றொன்று இக்காலத்துச் செய்யப்பட்டுளது. பழையதுமொன்றுண்டோ? ஆசிரிய மாலை என்பது இசைத்தமிழ் நூலுமன்று, நாடகத்தமிழ் நூலுமன்று; அது நற்றிணையும் அகநானூறும்போல அகப்பொருளில் வரும் ஆசிரியப்பாக்களின் தொகுதி.

தமிழ்ப்பண்

மேற்கூறிய பக்கத்தில் தாங்கள் தமிழ்ப் பண்ணுந் திறனும் இப்போது ராகம் என்னும் பெயரைப் பெற்றுள்ளன என்று கூறுகின்றீர்கள். இக்கூற்றும் ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று. பண் தமிழ் நாட்டிசை; ராகம் வடநாட்டது. சங்கராபரணம் என்னுமிராகம் செம்பாலைப் பண்ணன்று; அப்பண்ணோடு ஒருவாறு ஒத்ததாக, அன்றேல், ஒற்றுமை யுடையதாக இக்காலத்தாரால் கருதப்பட்டதாகும். நீலாம்புரியுமதுவே. தமிழ்ப் பண்ணறிந்தார் இக்காலத்து அரியர். திருவாரூரில் சிலருளர் போலும். கீழ்வேளூர்ச் சொக்கலிங்க தேசிகர் அவருளொருவர்.

அகத்தியர் மாணக்கர்

இந்தப்பக்கத்தில் அகத்தியர் மாணக்கர் பன்னிருவர்

என்று சொல்லி அவரின் பெயரும் கூறுகின்றீர்கள். அகத்தியர் மாணுக்கர் பன்னிருவர் என்பது புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரத்தால் தெரியவருகிறது. அவர்கள் பெயர் எங்கே கூறியுள? தாங்கள் கூறிய புலவருள் அவினயர் அகத்தியர் மாணுக்கராகத் தோன்றவில்லை. மயிலைநாதருரையின்படி அவினயர் சமணராவர். சமண சமயம் அகத்தியர் காலத்திற்றோன்றவில்லை. ஆதலால், அவினயர் அகத்தியர் காலத்தவரல்லர். இன்று வந்த செந்தமிழில் (செந்தமிழ்-vol-xx, no. 3) "பெயர் விழையான்" என்பவர் பல்காயனுரை "தொல்காப்பியனுரோடு ஒரு சாலை மாணுக்கராய் ஆசிரியர் அகத்தியனுரிடத்தில் கல்வி பயின்ற பன்னிருவருள் ஒருவர்" என்கின்றனர். இந்தப் பல்காயனுர் பெயரைத் தாங்கள் கூறிய பன்னிருவர் பெயருள் காணவில்லை. இதனுல் அகத்தியர் மாணுக்கர் பன்னிருவரையும் எந்த நூலேனும் சந்தேகமற எடுத்துக் கூறவில்லை என்று தெரிகின்றது. (பெயர் விழையான் வியாசம் பிழை பல பொதிந்ததாயுளது. அதனை ஆராய்வதற்கு இஃதிடமன்று.) அன்றி அடியார்க்கு நல்லார் தமது உரைப்பாயிரத்துள் இசை நுணுக்க மியற்றிய சிகண்டியாரை அகத்தியர் மாணுக்கர் பன்னிருவருள் ஒருவரென்கின்றனர். அவர் பெயரும் தாங்கள் கூறிய அகத்தியர் மாணுக்கர் பன்னிருவர் பெயருள் வரவில்லை. இனி, காக்கை பாடினியா ரென்பவர் ஆண்பாலாரா? பெண்பாலாரா? பாடினி என்பது பெண் பெயர். அது காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்பதனுன் விளங்கும்.—பதிற்றுப்பத்து, ஆறும்பத்தின் பதிகம்.

பன்னிரு படலம்.

"வேந்து விடுமுனைஞர் வேற்றுப் புலக்களவினுதந் தோம்பன் மேவற்றுகும்" என்னும் புறத்திணையியற் சூத்திர வுரையில் இளம்பூரணர் பன்னிரு படலத்துள் வெட்சிப் படலம் தொல்காப்பியர் கூறினுரென்றல் பொருந்தாதென்று கூறி அதற்கு நியாயமும் பல எடுத்துக் காட்டுவர்.

இனிப் பன்னிரு படலமியற்றியது அகத்தியர் மாணுக்கர்

பன்னிருவரு மென்பதற்குத் தக்க ஆதாரமில்லை. இது, பாயிர விருத்தியில் சிவஞான முனிவர் "பன்னிரு படல முதலிய நூல்களை வழீஇன என்றிகழ்ந்து, பன்னிரு படலத்துள் வெட்சிப் படலத்துள் வெட்சிப் படலம் தொல்காப்பியனார் கூறியதன் றெனவும், தொல்லாசிரியர் வழக்கொடு முரணித் தமக்கு வேண்டியவாறே கூறுப" என்பது இதனைக் குறித்ததாகும். பன்னிரு படலத்து வெட்சிப் படல மியற்றியது தொல்காப்பியர் என்பதற்குத் தக்க ஆதாரமில்லையாயின், ஏனைய பதினொரு படலங்களையு மியற்றிய பன்னொருவரும் அகத்தியர் மாணாக்கரே என்பதற்கு என்ன சான்று உளது?

பன்னிரு படலம் வெண்பாமாலை இயற்றிய ஐயனாரிதனார் காலத்தின்பின் இறந்துவிட வில்லை. அஃது இலக்கண விளக்க மியற்றிய வைத்தியநாத நாவலர் காலத்தும் அதற்குப் பின் சிவஞானமுனிவர் காலத்தும் இருந்ததாகத் தெரிகின்றது.

தொல்காப்பியத்தின் பிரிவு

தொல்காப்பியர் தமது நூலை எழுத்துச் சொற்பொருளென மூன்றதிகாரங்களாகப் பிரித்ததன் கருத்துச் சொற்பொருள், அல்லது பொருள் என்பதில் உலகத்துப் பொருளெல்லாம் அடங்கும் என்பதன்று. தொல்காப்பியர் தமது காலத்துத் தமிழிற் பரந்து கிடந்த இலக்கியங்களை ஆராய்தற்கு வேண்டிய இலக்கணங்களைக் கூற வந்தவரேயன்றி, உலகத்திலுள்ள பொருள்களெல்லாவற்றையும் ஆராய வரவில்லை. இது, அகத்தியத்தில் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் முத்தமிழிலக்கணமும் விரவிக் கூறப்பட்டமையின், இக் காலத்துச் சில்வாழ்நாட் பல்பிணிச சிற்றறிவினோர் அறியுமாறு இயற்றமிழை மாத்திரம் வேறெடுத்துத் தொகுத்தோதினார் தொலகாப்பியர் என்னும் தொல்லாசிரியர் கூற்றினான் இனிது விளங்கும். தொல்காப்பியர் தமது நூலை எழுத்துச் சொற் பொருள் யாப்பு அணியென ஐந்தாகப் பகுக்காததற்குக் காரணம் அக்காலத்தில் அவ்வித பாகுபாடு தோன்றாமையே. அஃதாவது அக்காலத்து எழுத்துஞ் சொல்லும் பொருளு

மன்றி, யாப்பும் அணியும் வெவ்வேறு கூறும் நூல்கள் தோன்ற வில்லை. தொல்காப்பியருக்குப் பிற்பட்டோர் தமிழிலக்கணத் தின் எழுத்துச் சொற்பொருள் யாப்பு என்று நான்காகப் பகுத்தனர். அதற்குச் சூத்திரமுமுண்டு. அவருக்கும் பிற் பட்டோர் எழுத்துச் சொற்பொருள் யாப்பு அணியென ஐந் தாகப் பகுத்தனர்.

அணியிலக்கணம்

இனிப் பஞ்ச லக்கணங்களுள் ஒன்றாகிய அணியிலக்கணம் தொல்காப்பியனார்க்கு உடன் பாடன்று என்பது சில உரையா சிரியர்களின் கொள்கை யென்று கூறுகின்றீர்கள். இஃது உரை யாசிரியர்கள் கருத்தே யன்றித் தொல்காப்பியர் கருத்தன்று. தொல்காப்பியர் காலத்தில் அணியிலக்கணம் வேறு தோன்ற வில்லை. தொல்காப்பியத்தின்பின் தோன்றிய அணியிலக்கண விஷயம் தொல்காப்பியத்திலில்லை யென்பது அதற்கொரு குறை யாகாது. அவ்வாறே, தொல்காப்பியர் காலத்திலில்லாமையால் அவர் கூறுதொழிந்த பொருள்களைப் பிற்காலத்துத் தோன்றிய நூல்கள் கூறுவதும் அவற்றுக் கிழுக்காகா. உலகத்தில் ஒரு பொருளேனும் தோன்றும்போது முற்றுருவாய்த் தோன்றுவ தில்லை. முதலில் ஒவ்வொன்றும் சிறு குழவியாகத் தோன்றிப் பின்னர் முதிர்ச்சியடையும். அவ்வாறே, உலகத்திற் றோன்றிய நூற்பொருள்களும் வளர்ச்சி யடைந்து வந்துள்ளன. ஒரு பொருளோடு மற்றொரு பொருளிடையுள்ள நுண்ணிய வேற் றுமை புலப்பட்ட போது, அதனை யுணர்த்த வெவ்வேறு நூல் கள் தோன்றுவதியல்பே. அவ்வாறு செய்யுளில் பயின்றுவரும் அணி வேறு பிரித்தாராயப்பட்டபோது அணி யிலக்கண மொன்று புதிதாய்த் தோன்றியது. ஆரிய முதலிய பிறபாஷை களிலும் அணியிலக்கணம் இவ்வாறு பின்னரே தோன்றிற்று என்று தாங்களே கூறுகின்றீர்கள்.

செய்யுளிலுள்ள அணி (அழகு) வேறு பிரிக்கப் படாதென் பதும் அதனால் அதற்கு அணியென்னும் பெயர் பொருந்தா தென்பதும் ஏற்றுக் கொள்ளத்தக்க கூற்றுக்களல்ல. அணி யென்பது செய்யுளின் அணியை யுணர்த்தும்போது உவம

ஆகுபெயர். மக்களணியும் அணிபோன்றலின் அதுவும் அணி யெனப்பட்டது. உவமம் பொருளோடு எல்லாவற்றினும் ஒத்திருக்க வேண்டுமென்னும் நியதி இல்லை. உவமமாவது பொருளோடு சிறிதொத்துச் சிறிதொவ்வா தொழிவது. ஆதலால் சாத்தனல் அணியப்படும் ஆடையாபரணமும் களப கஸ்தூரி முதலியனவும் சாத்தனில் வேருவது போல, செய்யுளின் அணி அதனின் வேருதல் வேண்டுவதன்று.

இனி அணியிலக்கண நூலார் அணிகளை முப்பத்தைந் தென்றும், நூறென்றும், நூற்றிருபத்துநான் கென்றும் பலவாறு கூறுதலும், ஒருவர் அணியென்று கூறியதை மற்ருெருவர் மறுத்தலும், ஒருவர் ஓரணிக்கு ஒரு பெயர் கொடுக்க மற்ருெருவர் அதற்கே வேறு பெயர் கொடுத்தலும் அணியிலக்கணம் ஒரு நூலாகாதென்பதற்குத் தக்க நியாயமாகா. இவ் வேறுபாடுகளெல்லாம் அணியிலக்கண வளர்ச்சிக்கண் தோன்றியவை. எழுத்திலக்கணம் சொல்லிலக்கணங்களிலும், பெரும்பான்மை பொருளிலக்கணத்தினும் இவ்வகை வேறுபாடுகள் காணப்படும். யாப்பிலக்கணத்தினுமுள வென்பது முன்னர்த் தளையைப் பற்றியும் பாவினங்களைப் பற்றியும் கூறுவதனல் புலனகும்.

தொல்காப்பியர் காலம்

"தொல்காப்பியர் கி. மு. மூன்ரும் நூற்ருண்டுக்கு முன் இருந்தவர் என்று கொள்ளத்தகுந்த காரணங்களுள" என்று மாத்திரம் சொலலுகின்றீர்களன்றி அக்காரணங்களை யெடுத்துரைத்தீர்களில்லை. தொல்காப்பியர் கிறிஸ்து பிறக்க இரண்டொரு நூற்ருண்டுகளுக்கு முன் இருந்தவரென்று பலரும் நம்புகின்ருர்கள். ஆயினும் எக்காரணங் கொண்டு அவ்வாறு நம்புகின்ருர்களென்பது அவர்க்கே தெரியாது. ஆகையால், அக்காரணங்களைத் தாங்கள் எடுத்துரைத்திருக்க வேண்டிய தவசியம்.

செய்யுளுறுப்பு

தொல்காப்பியர் தளையை ஒரு செய்யுளுறுப்பாகக்கொள்ள வில்லையென்று கூறுகின்றீர்கள் "மாத்திரை எழுத்தியலசை

வகை யெனுஅ" என்றற் றொடக்கத்துச் சூத்திரத்தில் தொல் காப்பியர் தளையை யெடுத்துக் கூருதது மெய். ஆயினும் செய் யுளியல் 33-ம் சூத்திரத்தில் "அடி யுள்ளனவே தலை யொடு தொடையே" என்று தளை கூறி, அவற்றின் பேதங்களாகிய ஆசிரியத்தளை, வெண்டளை, கலித்தளை முதலியவைகளை "ஆசிரி யத் தளை யென்றறியல் வேண்டும்" என்றும், "வெண்டளை விரவி யும் ஆசிரியம் விரவியும் என்றும்" என்றும், "கலித்தளை யடி வயினேரீற்றியற்சீர் நிலைக் குரித்தன்று" என்றும் 56,63,25-ஞ் சூத்திரங்களில் எடுத்தோதினர். இவற்ருல் தொல்காப்பியர் தளை கொண்டனரென்பது நன்கு புலப்படும்.

மற்று அவர் தளையை ஒரு முக்கியமான செய்யுளுறுப் பாக எடுத்துக் கூருததற்கு ஒரு காரணமுண்டு. அஃதியா தெனின், தொல்காப்பியர் காலத்துத்தமிழில் வழங்கிய பாக்கள் ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சியென்னும் நான்குமே. இவைக ளெல்லாம் ஆசிரியச்சீர், வெண்சீர், வஞ்சிச்சீர் என்பனவற்ரு லாவன. "தன் சீர்தன தொன்றிற்றன்றளையாம்" என்றபடி ஆசிரியச் சீரோடு ஆசிரியச் சீரும், வெண்சீரோடு வெண்சீரும், வஞ்சிச் சீரோடு வஞ்சிச்சீரும் ஒன்றுவது முறையே ஆசிரியத் தளை, வெண்டளை, வஞ்சித்தளை எனப்படும். வெண்சீரோடு வெண்சீரொன்ருமையே கலித்தளையாவது. ஆசிரியப்பா ஆசிரி யச் சீராலாவதென்றும், வெண்பா வெண்சீராலாவதென்றும் வஞ்சிப்பா வஞ்சிச் சீராலாவதென்றும் கொண்டபோது அச்சீர் கள் தளைவதனை வேறுபடுத்து ஆசிரியத்தளை, வெண்டளை, வஞ் சித்தளை யென்று சொல்லல் வேண்டாதாயிற்று. விருத்தந் தோன்றியது தொல்காப்பியர் காலத்துக்குப் பின். விருத்தத் துக்குத் தளை யில்லை. அஃதாவது எல்லாத் தளையும் விருத்தத் தில் வரும். அதுவுமன்றி விருத்தத்தில் இன்ன சீர்தான் வரு மென்ற நியதியுமில்லை. அதனுற் பிற்காலத்தார் ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி முதலியவற்றுக்கு இலக்கணங் கூறு மிடத்துக் குன்றக் கூறல் என்னுங் குற்றம் நிகழாவண்ணம் அவற்றுக்குச் சிறப்பா யுரியதான தளையை விதந்தெடுத்தோதல் வேண்டியதாயிற்று.

செய்யுளில் சந்தம் நோக்கிச் சொற்கள் விகாரமடைவதுண்டாயினும் அவ்விகாரத்தைச் செய்யுளுக் கின்றியமையாத ஒருறுப்பென்று கொள்வது பொருந்தாது. அதனுல் தொல்காப்பியர் விகாரத்தை ஒரு செய்யுளுறுப்பாகக் கொள்ளவில்லை. சொற்களைப் பலவாறு விகாரப்படுத்திச் செய்யுள் செய்தால், அச்செய்யுள் பொருள் புலப்பாடரிதாகிப் பயின்று வழங்காது; உலகத்தாரால் மனமகிழ்ந்து ஏற்றுக் கொள்ளப்படவும் மாட்டாது.

பாவினம்

இனிப், பாவினம் செய்யுளின் வகையன்றிச் செய்யுளுறுப்பாகாது. இப்பாவினம் பிற்காலத்துத் தோன்றியது. முதலில் தமிழில், ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா வென நான்கு பாக்களே யிருந்தன. விருத்தம் ஆரியத்திலிருந்து தமிழில் வந்தது. அதனையு மொரு பாவகையாகக் கொண்டு, ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, விருத்தப்பா வெனப் பா ஐந்து வகைப்படுமென்று கூறுது, இரண்டு சீரான்வரும் விருத்தத்தை வஞ்சித்துறை யென்றும், மூன்று சீரான் வரும் விருத்தத்தை வஞ்சி விருத்தமென்றும், நான்கு சீரான் வரும் விருத்தத்தைக் கலிவிருத்த மென்றும், ஐந்து சீரான்வரும் விருத்தத்தைக் கலித்துறை யென்றும், அறுசீர் முதலியவற்றான் வரும் விருத்தத்தை ஆசிரிய விருத்தமென்றும் மேற்கூறிய பாக்களின் சீர்நிலைக்கேற்ப அவைகளுக் கினமாக்கினது பிற்காலத்தாசிரியர் செய்த தவறு. அவர்கள் தமிழ்ப்பா நான்கென்று தொல்லாசிரியர் வகுத்த வரையறையைக் கடக்க அஞ்சினர் போலும். இவ்வாறு தொல்லாசிரியர் வகுத்த வரையறையைக் கடக்க வஞ்சி இலக்கணத்திற் றவறியது எழுத்திலக்கணம் சொல்லிலக்கணங்களிலும் பலவுள. பிற்காலத்தாசிரியர் "இனமென்று காட்டிய உதாரணங்கடாம் அவர் சேர்த்த அவ்வப் பாக்கட்கே இனமாகாது ஒழிந்த பாக்கட்கும் இனமாதற்கு ஏற்றலானும், துறையை விருத்தமாகவும் தாழிசையை விருத்தமாகவும் ஓதற்கு அவை ஏற்றமையானும், "மூவா முதலா" என்னும் கலி முதலியன தாழம்பட்ட வோசையான் விருத்தமாயும், சீர்வரை

யறையானும் மிகத் துள்ளிய வோசையானுந் துறையாயும் கிடத்தலின் இதனை விருத்தக் கலித்துறை யெனல் வேண்டும்; அது கூறவே, துறையும் விருத்தமும் எனப் பகுத்தோதிய இலக்கணம் நிரம்பாதாமாகலானும் இனமென்றல் பொருத்தமின்று" என்று நச்சினார்க்கினியர் பாவினம் என்னும் பாகுபாட்டின் குறைகளை எடுத்து நன்கு காட்டுவர்.

அகத்தியருக்கும் தொல்காப்பியருக்கும் இனம் உடன்பாடன்று என்று சொல்வது உண்மையாகாது. அவர் காலத்து இப்பாக்களின்மையின் அவர் இவற்றுக்கு இலக்கணங் கூறாராயினர். இதுவே உண்மை. விருத்தங்களைக் கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியப்பாக்களுக்கு இனமென்று கூறுவது முழுதும் தவறு. அன்றியும் இது விஷயத்தில் அகத்தியரைத் தொல்காப்பியரோடு சேர்த்து அவர்க்கும் இது உடன்பாடென்றுவது, உடன்பாடன்றென்றுவது சொல்வதும் தவறு. அகத்தியர் செய்த இலக்கணத்தினை நாமும் கண்டிலம், தொல்காப்பிய உரையாசிரியர்களும் கண்டிலர். அகத்தியர் செய்யுளிலக்கணம் கூறினரோ என்பதும், கூறினராயின் தொல்காப்பியர் கூறிய செய்யு ளிலக்கணங்க ளெல்லாம் கூறினரோ என்பதும் தெரியா. ஆகலான், இவ்விஷயத்தில் அகத்தியர் கருத்து இதுவென்று துணிதல் முற்றவியலாது.

பாட்டியல்

சங்க காலத்துப் பாட்டியலென்றொரு நூலிருந்ததில்லை. அன்றி அகத்தியர் பாட்டியல் செய்யவுமில்லை. அகத்தியர் மாத்திரமன்று, தொல்காப்பியரும் பாட்டியல் கூறவில்லை. பாட்டியலிற் கூறப்படும் அந்தாதி, கோவை, கலம்பகம், மாலை முதலியன தொல்காப்பியர் காலத்தில் தோன்றவில்லை. அதனால் அவர் அவற்றுக் கிலக்கணங் கூறிற்றிலர். இது "விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்ற செய்யுளியற் சூத்திரத்துக்குப் பேராசிரியர் எழுதிய உரையான் நன்கு புலப்படும். பரணர் பாட்டியலென்றொரு நூல் இருந்ததாகத் தெரிகின்றது. அது யாரால் எந்தக் காலத்தியற்றப்பட்டதென்பது தெரியாது. பன்னிரு பாட்டியலென்பது ஒரு தொகை நூல். பன்னிரண்டு

நூல்களிலிருந்து பாட்டுக்களின் இலக்கணங்களை எடுத்துக் கூறும் சூத்திரங்களை ஒன்று தொகுத்தாக்கியது. இதுவும் யாரால் தொகுக்கப்பட்டதென்பதும் எக்காலத்துத் தொகுக்கப்பட்டதென்பதும் தெரியா. அச்சிட்ட பன்னிரு பாட்டியலில் அகத்தியரோடு பதின்மூன்று புலவர்கள் பெயர் காணப்படுகின்றன. அகத்தியர் பெயரும் மற்றையோர் பெயர்போலத் தனியே காணாது அகத்தியர் பாட்டியலென்னும் சொற்றொடரில் காணப்படுகின்றது. அகத்தியரை நீக்கின், பாட்டியல் கூறிய புலவர் பன்னிருவராவர். இப்பன்னிரு பாட்டியலில் சாதகம் இன்னதென்று கூறும் சூத்திரத்தில் சகாத்தம் என்னும் பதம் வருதலால், இச்சூத்திரம் சகாத்த வருஷம் தமிழ் நாட்டில் வழக்காற்றில் வந்ததன்பின் இயற்றப்பட்டதென்பது நன்கு புலப்படும். சகாத்தம் தமிழ் நாட்டில் வழக்காற்றில் வந்தது ஆறுமேழாம் நூற்றாண்டின் பின் என்ப. இன்னும் பல வடமொழிச் சொற்கள் தொல்காப்பியா காலத்தில் தமிழில் வந்து வழங்காதன, பன்னிரு பாட்டியற் சூத்திரங்களில் வருகின்றன. அவை பாலன், குமாரன், அரசன், உதாசீனம், பரிதி, இயமன், வருணன், சோமன், அருக்கன், நபுஞ்சகம், நாரணன் முதலாயின. இதனால் பாட்டியல் பிற்காலத்து நூலென்பது நன்கு விளங்கும்.

சிவஞான போதக்கருத்து

இரண்டாவது சூத்திரம்

முதலாவது அதிகரணம்

[திரு. M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B A.]

(௬௩௭-ம் பக்கத் தொடர்ச்சி)

45. இனிச் சித்தாந்த சைவர்கள் அத்துவிதம் என்ற சொல்லின் முன்னுள்ள அகரத்துக்கு வடமொழி இலக்கண வழக்குக்கு இணங்க அன்மைப் பொருள்கொண்டு முதல்வனும்

உயிர்களும் பிரிக்க முடியாத கலப்பின் தன்மைபற்றி இரண்டு அன்று அதாவது ஒன்றாய் நிற்கின்றான் என்றும், அவ்வாறு ஒன்றாய் நிற்பினும் முதல்வனும் உயிர்களும் வெவ்வேறு பொருள்களாதலின் பிரிக்க முடியாத பொருளின் தன்மைபற்றி இரண்டாய் அதாவது வேறாய் நிற்கின்றான் என்றும் கடவுள் உயிர்களுடன் கலந்திருத்தல் மாத்திரமன்றி உயிர்கள் உலகப் பொருளை நுகருதற்கு நுகர்வுப் பொருளிலும் கலந்து நின்று விளக்கி அவர்களோடு உடன் சென்றியைந்து நுகர்தற் செயலிலும் செலுத்தி நிற்குந் தன்மையால் உடனாய் நிற்கின்றான் என்றும் கூறுவர். அகரத்துக்கு அன்மைப்பொருள் கொள்ளுதல் பற்றி அத்துவிதம் என்னும் சொல்லானது முதல்வன் உயிர்களோடு கலப்புத் தன்மையால் ஒன்றாய் நிற்கும் நிலையும் பொருட்டன்மையால் வேறாய் நிற்கும் நிலையும் உலகப் பொருள்களை நுகர்தற் செயலிற் செலுத்தி உடனாய் நிற்றலால் உடனாய் நிற்கும் நிலையும் உணர்த்துவ தொன்றாகும். சைவர்கள் இவ்வாறு கூறும் அத்துவிதம் சுத்தாத்துவிதம் என்று கூறப்படும். ஸ்மார்த்தர்கள் தங்கள் அத்துவிதத்துக்குக் கேவலம் என்ற அடைமொழியைச் சேர்த்தும் வைணவர்கள் தங்கள் அத்துவிதத்துக்கு விசிட்டம் என்ற அடைமொழியைச் சேர்த்தும் சைவர்கள் கூறும் அத்துவிதம் கூறப்படாமையால் அஃது அடைமொழி சேர்க்கப்படாத அத்துவிதம் அதாவது சுத்தாத்துவிதம் என்று கூறப்பட்டது. சைவர்கள் சுத்தாத்துவிதிகள் என்று கூறப்படுவார்கள். இந்தச் சுத்தாத்துவிதத்தில் கேவலாத்துவிதிகள் கூறும் ஒன்றாய் நிற்கும் நிலையும் துவிதிகள் கூறும் வேறாய் நிற்கும் நிலையும், விசிட்டாத்துவிதிகள் கூறும் உடனாய் நிற்கும் நிலையும் அடங்கியுள்ளன. இந்த மூன்று கொள்கையர்களும் (வாதிகளும்) சுத்தாத்துவிதிகள் கூறும் மூன்று நிலைகளில் ஒவ்வொன்றையே எடுத்துக் கூறுவர். அவ்வாறு அவர்கள் மூவரும் கூறினும் அவர்கள் கூறும் மூன்று நிலைகளும் சேர்ந்தும்கூட சுத்தாத்துவிதத்துக்கு ஒப்பு ஆகாது. கேவலாத்துவிதிகள் கூறும் ஒன்றாய் நிற்கும் நிலை சுத்தாத்துவிதிகள் கூறும் ஒன்றாய் நிற்கும் நிலைக்குப் பொருந்தி இயைவதா

காது. துவிதிகள் கூறும் வேறாய் நிற்கும் நிலை சுத்தாத்துவிதிகள் கூறும் வேறாய் நிற்கும் நிலைக்குப் பொருந்தி இயைவதாகாது. விசிட்டாத்துவிதிகள் கூறும் உடனாய் நிற்கும் நிலை சுத்தாத்துவிதிகள் கூறும் உடனாய் நிற்கும் நிலைக்குப் பொருந்தி இயைவதாகாது. அவ்வாறு பொருந்தாமை, அம்மூவர்களும் தங்கள் தங்கள் கொள்கையை விளக்கக் கூறும் உவமைகளுக்கும், சுத்தாத்துவிதிகள் கூறும் உவமைகளுக்குமுள்ள வேறுபாடுகளை அறியுமாற்றால் நன்கு விளங்கும். அந்த உவமைகள் கூறி விளக்கப்படும்.

46. கேவலாத்து விதிகள் தங்கள் அத்துவிதக் கொள்கையை விளக்கப் பொற்பணி உவமை கூறுவர். பொன் ஒன்றிலிருந்தே பலவகைப் பணிகள் (ஆபரணங்கள்) செய்யப்படுதல் போல, பிரமப் பொருளொன்றிலிருந்தே உயிர்ப்பொருளும் உயிரில்லாத உலகமும் உண்டாயின என்பது பொற்பணி உவமையாற் பெறப்படும் பொருள். ஒன்பது மாற்றுப் பொன்னிற் செய்யப்பட்ட ஒரு நகையானது ஒன்பது மாற்று உடையதாய் விளங்குமன்றி அதற்குச் சிறிது குறைந்தாவது கூடியாவது விளங்காது. அவர்கள் கூறுகிறபடி நிமித்த காரணமாகிய பிரமப் பொருளே முதற்காரணமுமாய் அதனிடமிருந்து உயிர்ப்பொருளும உயிரில்லாத பொருளும் தோன்றுவனவாயிருந்தால் அந்தப் பிரமப்பொருளினிடத்திலுள்ள தன்மையை அதன் காரியங்களாகிய உயிரிலும் உயிரில்லாத உலகத்திலும் நாம் காணுதல் வேண்டும். அவ்வாறின்றி பிரமப் பொருள் முற்றறிவுடைய பொருளாயும் உயிர் சிற்றறிவுடைய பொருளாயும் உயிரில்லாத உலகம் அறிவில்லாத பொருளாயும் விளங்க நாம் காண்கின்றோம். மேலும் பொற்பணி உவமை செயற்கைப் பொருள் உவமை இயற்கைப் பொருள் உவமை அன்று. ஆதலின் கேவலாத்துவிதிகள் ஒன்றாய் நிற்கும் நிலைக்குக் கூறும் (உவமை சுத்தாத்துவிதிகள் கூறும்) ஒன்றாய் நிற்கும் நிலைக்குச் சிறிதும் பொருந்தாதிருக்கின்றது. ஒன்றாய் நிற்கும் நிலைக்குச் சுத்தாத்து விதிகள் கூறும் உவமை "உடல் உயிர்" என்னும் இயற்கைப் பொருள் உவமை. உடல் உயிர் உவமையானது

உடல் உயிர்கள் இரண்டும் வேறு வேறாயுள்ள தனித்த பொருள்கள் என்பதையும் வேறு வேறு பொருள்களாயிருந்தாலும் பிரிக்க முடியாதபடி ஒன்றுடனொன்று கலந்திருக்கின்றன என்பதையும் நன்கு விளக்குகின்றது. ஆசிரியர் இந்த உவமையைக் "கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டு" என்ற வெண்பாவில் கூறித் தாம் கூறுகிற ஒன்றாய் நிற்கும் நிலையை நன்கு விளக்குகின்றார்.

47. துவிதிகள் தங்கள் துவிதக் கொள்கையை விளக்க 'இருள் வெளி' என்ற இயற்கைப் பொருள் உவமையைக் கூறுவர். வெளி என்பது ஒளி. முதல்வனும் உயிர்களும் தனித்த வேறு வேறு பொருள்கள் என அவர்கள் கூறுதலை விளக்குதற்கு இந்த உவமை பொருத்தமாகத் தோன்றினும் முதல்வனுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பை விளக்குதலில் அது முரண்பாடான கருத்தைக் குறிக்கின்றது. இருள் தோன்றும் பொழுது வெளியும், வெளி தோன்றும் பொழுது இருளும் தோன்றாமலிருத்தல் போல முதல்வனும் உயிரும் ஒருவரோடொருவர் சேரமாட்டார்கள் என்ற பொருத்த மில்லாத கருத்தை இந்த உவமை குறிப்பிடுகின்றது. அவர்கள் முதல்வனுக்கு உயிர்களிடத்தில் சுத்தாத்துவிதிகள் கூறுகிற நிறைவு (வியாபகம்) கூறாவிடினும் உயிர்கள் முதல்வனுக்குக் கீழ்ப்பட்டும் (Subordinate) அவனைச் சார்ந்தும் (Dependent) உள்ளவர்களென்று கூறுதலால் அவர்கள் கூறுங் கருத்தை விளக்கக்கூட இருள் வெளி என்ற உவமை பொருத்தமுடையதன்று. முதல்வனைச் சார்ந்தன்றி உயிர் தனித்து நில்லாதென்ற கொள்கையுடைய சுத்தாத்துவிதிகள் கூறும் வேறாய் நிற்றல் நிலைக்கும் இந்த உவமை சிறிதும் பொருத்தமுடையதாகாது. ஆதலின் சுத்தாத்துவிதிகள் "கண் அருக்கன்" என்ற உவமையைக் கொள்வர். கண் அருக்கன் உவமையானது கண்ணும் அருக்கனும் (கதிரவனும்) வேறு வேறு பொருள்களாயிருத்தல் போல முதல்வனும் உயிரும் வேறுவேறு பொருள்களென்னும் கருத்தை விளக்குவதோடு கண்ணொளியானது தன்னொளியுடன் அருக்கன் ஒளி கலந்தாலன்றி ஒரு பொருளையும் பார்க்க

இயலாததுபோல உயிர் தன்னுடன் கடவுள் கலந்து இயக்கினலன்றி இயங்க முடியாதென்ற கருத்தையும் நன்கு விளக்குகின்றது. ஆசிரியர் "அகரமும் ஏனைய எழுத்துக்களும்" என்ற உவமையைக் கூறிச் சுத்தாத்துவிதிகள் கூறும் வேறாய் நிற்கும் நிலையை விளக்குகின்றார். எவ்வாறு அகரமாகிய நாதம் இயக்கினலன்றி ஏனைய உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் இயங்காவோ அவ்வாறே முதல்வன் இயக்கினலன்றி உயிர்களும் உயிரில்லா உலகமும் சிறிதும் இயங்கா என்னும் கருத்தை அகரமும் ஏனைய எழுத்துக்களும் என்னும் உவமை நன்கு விளக்குகின்றது.

48. இனி விசிட்டாத்துவிதிகள் தங்கள் விசிட்டாத்துவிதக் கொள்கையை விளக்க 'சொல்லும் பொருளும்' என்ற உவமை கூறுவர். சொல்லின்றிப் பொருளில்லை, பொருளின்றிச் சொல்லில்லை என்ற காரணத்தால் சொல்லுக்கும் பொருளுக்குமுள்ள நெருங்கிய ஒற்றுமையானது தங்களுடைய கடவுளாகிய திருமாலுக்கும் பசுபாசங்களுக்கும் (உயிர் உலகங்களுக்கும்) உள்ள ஒற்றுமையை விளக்குகிறதற்கும், சொல்லுக்கும் பொருளுக்கும் அத்துணை நெருங்கிய ஒற்றுமையிருப்பினும், சொல் வேறு பொருள் வேறு என்னும் வேற்றுமையுமிருத்தலால், அந்த வேற்றுமையானது திருமாலுக்கும் பசுபாசங்களுக்கும் உள்ள வேற்றுமையை விளக்குதற்கும் சொல்லும் பொருளும் என்ற உவமை பொருத்தமுள்ளதா யிருக்கிறதென்று அவர் கூறுவர். ஒருவன் ஒரு சொல்லைச் சொல்ல அந்தச் சொல்லோடு அதன் பொருளும் உடன் தோன்றுதலால் உடன் றோன்றும் நிலையை அந்த உவமை குறிக்கிறதென்று அவர்கள் கொள்வர். ஆனல், அவர்கள் படைப்புக் காலத்தில் மூலப் பகுதி உருவமாய்த் தோன்றுகிற திருமால் பசுபாசங்களாய்ப் பரிணமிக்கின்றானென்று தங்கள் கடவுளுக்குப் பரிணமம் **(Materialization)** கூறுதலினல், இந்தச் சொல்லும் பொருளும் என்ற உவமை அவர்களுடைய கொள்கையை விளக்கப் பொருந்தியதா யுள்ளது அன்று. ஏனெனில் சொல்லுக்கும் பொருளுக்கும் காரண காரியத் தொடர்பு கூடாது. அதாவது

சொல்லாகிய காரணத்திலிருந்து பொருள் காரியமாய்ப் பிறக்கிறதில்லை. ஒரு சொல்லானது அது குறிக்கிற பொருளை மக்களுக்குப் பழக்கத்தினால் நினைப்பூட்டுதற்குக் கருவியா யிருத்தலன்றிப் பொருளுக்குக் காரணமாக மாட்டாது. இந்த உவமை சுத்தாத்துவிதிகள் கூறும் உடனாய் நிற்கும் நிலைக்குப் பொருத்த முடையதல்ல. அவர்கள் 'கண்ணொளியும் ஆன்மபோதமும்' (உயிரறிவும்) என்ற உவமை கொள்வர். கண் ஒரு பொருளைப் பார்க்கும்பொழுது அதனுடன் உயிரும் சென்றியைந்து அதனைச் செலுத்தினாலொழிய கண் அப்பொருளைப் பார்க்க இயலாததுபோல ஒரு உயிர் ஒரு நுகர்வுப் பொருளை நுகரும் பொழுது முதல்வன் நுகர்வுப் பொருளை விளக்கியும் அந்த உயிருடன் சென்றியைந்து அதனை அந்த நுகர்வுப பொருளிற் செலுத்தியும் நின்றாலொழிய உயிர் அந்தப் பொருளை நுகர இயலாது. இந்தக் கருத்தைத்தான் திருமாளிகைத் தேவர் தாம் அருளிச் செய்த கோயில் திருவிசைப்பா பாட்டுக்களில் "நுகருமா நுகரே" "இசையுமா இசையே" "நணுகுமா நணுகே" முதலிய சொற்றொடர்களாற் குறித்தருளினார். முதல்வன் உயிர்களோடு கலந்து நின்று அறிவிக்கும் வேறு நிலை எல்லா உயிர்களுக்கும் பொதுவாய்ச் செய்யும் பொது நிலையாகும். முதல்வன் ஒவ்வொரு உயிருக்கும் அதனறிவுடன் கலந்து காணும் உடனிலை சிறப்பு நிலையாகும். இந்தக் கருத்துக்களைச் சுத்தாத்துவிதிகள் கூறுகிற கண்ணொளியும் ஆன்ம போதமும் என்ற உவமை நன்கு விளக்குகிறது. ஆசிரியர் 'பண்ணும் ஓசையும்' என்ற உவமையையும் 'பழமும் சுவையும்' என்ற உவமையையும் எடுத்துக் காட்டு வெண்பாவிற் கூறி, தாம் கூறுகிற உடனாய் நிற்கிற நிலையை விளக்குகின்றார்.

50. இனி, முதல்வனுக்கும் உயிர்களுக்குமுள்ள அத்துவிதத் தொடர்பில் ஒன்றாய் நிற்கும் நிலை, வேறாய் நிற்கும் நிலை, உடனாய் நிற்கும் நிலை ஆகிய மூன்று நிலைகளும் அடங்கியுள்ளன எனக் கூறுதல் பன்முடிவுக் கொள்கையர் (அநேகாந்த வாதிகள்) கூறுகிறபடி பன்முடிவுக் கொள்கையாக முடியாதா எனில முடியாது; காரணங் கூறுதும். வழி நூலாசிரியர் தாம் அருளிச்

செய்த சிவஞான சித்தியார் ௧-வது சூத்திரம் ௬௨-வது செய்யுளில் வெளியிட்ட கருத்துகளாவன :—“ முதல்வனோடு பிரிப்பின்றி நிற்கின்ற சிவசத்தியின் சொரூபம் யாதெனில், உயிர்கட்கு அனுக்கிரக மாத்திரங் குறித்துப் பொது வகையான் அறிந்தும் அறிவித்தும் நிற்பதாகிய ஞானம் ஒன்றே யாம். அதுவே பராசத்தி எனப்படும். அந்த ஞானம் உயிர்கட்கு மலபாகம் வருவித்தற் பொருட்டு ஐந்தொழில் செய்தலைக் குறித்துச் சிறப்பு வகையான் வியாபாரிக்குங்கால் ஒரு கூற்றானே திரோதான சத்தியென நின்று இச்சாஞானக் கிரியையென முத்திறப்பட்டு வியாபாரிக்கும் ஞானம் எவ்வாறுளதோ அவ்வாறே இச்சை கிரியைகளும் நடத்தலின், இச்சை கிரியைகள், ஞானத்தின் விசேடங்களே யன்றி வேறல்ல. காரியத்தால் அனேகமாகிய சென்னி முதலிய வியாபார சத்திகளெல்லாம் பராசத்தி ரூபமாகிய தடைசெய்யா ஞானம் ஒன்றான் உளவாவன என்க ”. இங்ஙனம் கூறியவாற்றால் முதல்வன் தனது மறைப்பு அருள் வலியினது (திரோதான சத்தியினது) மூன்று கூறுகளாகிய வேட்கை வலி (இச்சா சத்தி) அறிவு வலி (ஞான சத்தி) செயல் வலி (கிரியா சத்தி) என்னும் மூன்று வலிகளாலும் உயிர்கள் பொருட்டு அவைகளோடியைந்து நின்று ஐந்தொழில் செய்கின்றான் என்பது பெறப்படுகின்றது. முதல்வன் தனது வேட்கை வலியால் உயிர்களோடு இயைந்து நின்று பேரிரக்கங் கொண்டு அவைகளினுடைய நலத்தின் பொருட்டு ஐந்தொழில் செய்தற்கு தன்னுள்ளே நோக்கி நிற்றல், ஒன்றாய் நிற்கும் நிலையும், தனது அறிவு வலியால் அவ்வாறு நோக்கி அறிந்தவாறு உடல், உட்கரணம் உலகம் நுகர்பொருள்களை (தனுகரண புவன போகங்களை) மாயையிலிருந்து பருமையாக (தூலமாக) வெளிப்படுத்தி நிறுத்துதலும் அப்படிச் செய்தற்குள்ள தன் கருத்தை உயிர்களுக்கு வேதாகம முதலிய நூல்களின் வழியாய் அறிவித்தும், உயிர்கள் உண்ணின்று அறிவித்தும் நிற்றல் வேறாய் நிற்கும் நிலையும், தனது செயல் வலியால் உயிர்கள் நுகர்வுப் பொருள்களை நுகருமாறு நுகர்வுப்பொருள்களிற் கலந்து நின்று விளக்கியும் உயிர்களுடனியைந்து நின்று

நுகர்வுப் பொருளிற் செலுத்தியும் நிற்றல் உடனாய் நிற்கும் நிலையும் ஆகின்றன. மேலே 31-வது பகுதி (Para.) யிற் கூறப்பட்ட நுண்மை ஐந்தொழில் பருமை ஐந்தொழில் மிக்க நுண்மை ஐந்தொழில் என்ற மூன்றும் முறையே இந்த வேட்கை வலி அறிவு வலி செயல் வலிகளின் தொழில்களென நாம் ஊகித்து அறிந்து கொள்ளலாம். ஆகவே முதல்வன் செய்யுந் தொழில் முத்திறப்பட்டு ஒரு முடிவான பயனையே உயிர்களை அடையச் செய்வதாதலின் அத்துவித இலக்கணமும் பன் முடிவுக் கொள்கை யாதலின்றி ஒரு முடிவுக் கொள்கையாக முடியுமென அறிக.

51. மேலே கூறிய உண்மையை நாம் உலக நிகழ்ச்சிகளிலுங் காணலாம். முதல்வனைப் போல மக்களும் வேட்கை, அறிவு, செயல் வலிகளை உடையவர்கள். ஆனால் முதல்வனுக்கு அவ்வலிகள் மலத்தாற்றடைப்படவில்லை; மக்களுக்கு அவ்வலிகள் மலத்தாற் றடைசெய்யப்பட்டுள்ளன. மக்களும் எந்தக் கருமத்தையும் தங்களுடைய தடைப்பட்ட வேட்கை அறிவு செயல் வலிகளாலேயே செய்கின்றார்கள். எடுத்துக் காட்டாக ஒரு நாட்டிற்குத் தலைவனாயுள்ள அரசன் ஒருவன் தன் கீழ் வாழுங் குடிகளுக்கு அவர்கள் நிலைமை நோக்கி யாதாமொரு நலஞ்செய்தற் பொருட்டு தன் அமைச்சர்களுடன் செய்யத் தக்கன யாவை எனத் தனக்குள்ளே வகையறச் சூழ்ந்து துணிந்தும், அவவாறு சூழ்ந்து துணிந்த கருமங்களை, தன் குடிகளுக்கு நேரேயும் தன் பணியாளர் வழியாயும், பத்திரிகைகள் வழியாயும் வெளிப்படுத்தி அறிவித்தும் அறிவித்தபடி குறித்த கருமங்களைக் குடிகளுக்குத் தன் பணியாளர்களால் அவர்களுடன் இயைந்து நின்று செய்யும்படி செய்வித்தும், தன்னுடைய வேட்கை வலியால் குடிகளுடைய நலத்தை அவர்கள் மேலுள்ள அன்பால் தனது நலமாகக் கருதி ஒன்றுபட்டு நிற்கும் ஒன்றாய் நிற்கும் நிலையையும் தனது அறிவு வலியால் அவர்களுக்கு அறிவித்து வேறாய் நிற்கும் நிலையையும் தனது செயல் வலியால் அவர்களோ டொருங்கியைந்து நின்று உடனாய் நிற்கும் நிலையையும் உடையவனாகின்றான். மேலே, வேட்கையும் செயலும்

அறிவின் சிறப்புகளே (ஞான விசேடங்களே) என்று கூறியபடி வேட்கை வலியால் ஒன்றாய் நிற்கும் நிலையும் செயல் வலியால் உடனாய் நிற்கும் நிலையும் உண்மையில் அறிவு வலியினது சிறப்பு நிலைகளே யாம். அரசனுக்குத் தன் குடிகள் மேலுள்ள வேட்கையும் (அன்பும்) செயலும் அவனுடைய அறிவின் தன்மையைப் பொறுத்தே யுள்ளது. அரசன் இவ்வாறு தன் குடிகள் நலத்தின் பொருட்டு ஒரு கருமஞ் செய்தலினால் மூன்று முடிபுகளைத் தனது உள்ளத்தில் உடையவனாகான் அவனுடைய தொழிலானது இயற்கையா யுள்ளனவாகிய வேட்கை அறிவு செயல்களால் மூன்று திறப்பட்டுக் குடிகளுக்கு ஒரு முடிவான பயனையே அடையச் செய்கின்றன என்பது வெளிப்படை. இந்த முறைமையிலே இக்காலத்தில் அரசியல் சட்டங்களும் செய்யப் படுகின்றன.

52. அத்துவிதத் தொடர்புக்கு மூன்று நிலைகள் கூறப் படுதலால் அது மூன்று முடிவுகளை உடையதாகாது என்னுங் கருத்தை மாணாக்கருக்கு நன்கு உணர்த்துதற் பொருட்டே, ஆசிரியர் மூன்று நிலைகளுக்கும் உவமைகளாக வேறு வேறு எடுத்துக் காட்டு (உதாரணம்) கூறினபின், மூன்று நிலைகளுக்குஞ் சேர்ந்து அரக்கும் கற்பொடியும் என்ற ஒரு எடுத்துக் காட்டை உவமையாகக் கூறியருளினார்.

53. மேலும் முதல்வன் உயிர்களுடன் ஒன்றாய் நிற்கும் நிலையினால் அவைகளை நிலைத்திருக்கும்படி செய்கின்றான்; வேறாய் நிற்கும் நிலையினால் அவைகள் அறியும்படி அறிவிக்கின்றான்; உடனாய் நிற்கும் நிலையினால் அவைகளை நுகர்வுப்பொருளை நுகருமாறு நுகர்வுப் பொருளிற் செலுத்துகின்றான். இவ்வாறு உயிர்கள் நிலைத்திருத்தற்கும் அறிதற்கும் நுகர் பொருளிற் செல்லுதற்கும் முதல்வனுடைய உதவி இன்றி அமையாது வேண்டப் படுதலின் இம்மூன்று நிலைகளில் ஒன்று இல்லையாயினும் இரண்டில்லையாயினும் அவை தங்களுடைய தடைப்பட்ட வேட்கை அறிவு செயல்களால் உலகிற் றங்கள் கருமங்களைச் செய்து திருத்தமடைந்து உலகவாழ்வினாலாகிய பயனைப் பெறமுடியாது. இதனால் மூன்று நிலைகளில்

ஒவ்வொரு நிலையை மாத்திரம் தங்கள் கொள்கையாகக் கொள்ளு கிற ஸ்மார்த்தர்களுடைய கேவலாத்துவிதமும் (Monism) மாத்துவர்களுடைய துவிதமும் (Dualism) வைணவர்களுடைய விசிட்டாத்துவிதமும் (Qualified Dualism) எவ்வாறு உண்மைக்குப் பொருந்துவனவல்ல என்பது எளிதில் அறியப்படும்.

54. மூன்று நிலைகளில் ஒவ்வொரு நிலையை மாத்திரம் கொள்ளுதல் பொருத்தமில்லை என்பது ஒக்கும்; மூன்று நிலைகளும் சேர்ந்து சுத்தாத்துவிதக் கொள்கைக்கு ஒப்பாகுமென்று கூறுதல் பொருந்தாதோ எனின் பொருந்தாது. காரணங் கூறுதும். சைவசமயத்திற் கூறப்படும் சுத்தாத்துவிதச் சிறப்பு உண்மையானது முழு உண்மை (Absolute Truth) ஆகும். அது தத்துவங்களில் வைத்து அறியப்படும் உண்மை அல்ல. தத்துவங்களைக் கடந்த நிலையில் (அதீத நிலையில்) வைத்து அறியப்படுவது,

"தத்துவந் தலைநின்ற வர்க்கல்லது
தத்துவ னலன்றன் புகலூரனே"

என்று திருநாவுக்கரசு சுவாமிகள் கூறுதல் காண்க.

சுத்தாத்துவிதப் பொது உண்மையும் சுத்தாத்துவிதச் சிறப்பு உண்மைக்குப் பொருந்தியுள்ளதாக விருக்கும் தத்துவங்களில் வைத்து அறியப்படும் எல்லாம் குறைவுபட்ட உண்மை (Relative Truth) யாகவே யிருக்கும். தத்துவங்கள் பலவாறான பருமையும் நுண்மை (Density and Subtility) யுள்ள ஆன்மதத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவம் என மூன்று வகைகளாய்ப் பிரிக்கப்பட்டிருத்தலின் அவைகளில் வைத்து அறியப்படும் உண்மைகளும் பருமை நுண்மைக்குத் தக்கவாறு பலவாறாகக் குறைவுபட்டன வாயிருக்கும் ஒவ்வொரு தத்துவத்திலும் நுண்மை ஏற்றக் குறைவுகளுள்ள பல படிகளுண்டு. தத்துவங்களினது நுண்மை (Subtility) ஏற ஏற அவைகளில் விளங்கும் உண்மையும் ஏற்றமாய் விளங்கும். மேலுள்ள தத்துவமானது அதற்கு அடுத்துக் கீழேயுள்ள தத்துவத்துக்கு உயிராயும் (Life) கீழுள்ள தத்துவமானது அதற்கு அடுத்து

மேலுள்ள தத்துவத்துக்கு உருவமாயும் (Form) இருக்கும். இந்த தத்துவங்களுக்குள் மேலான சிவதத்துவத்தில் வைத்து அறியப்படும் உண்மையே மேலாக விளங்கும் உண்மையாகும். இவ்வாறு, தத்துவங்களில் வைத்து உண்மை அறியப்படுதலின் 'தத்துவம்' (तत्त्व) என்ற வடமொழிச் சொல்லானது உண்மை என்ற பொருளிலும் தத்துவதரிசி (तत्त्वदर्शि) என்ற சொல்லானது தத்துவ ஞானி என்ற பொருளிலும் வழங்கப் படுகின்றன. ஆனால் கேவலாத்துவிதிகளும் துவிதிகளும் விசிட்டாத்துவிதிகளும் மண்முதல் பிரகிருதி (மூலப் பகுதி) யீறாக இருபத்து நாலு தத்துவங்களைக் கொள்ளுகிறார்கள். இந்த இருபத்துநாலு த்துவங்களும் கீழேயுள்ள அசுத்தமாயையாலாகிற ஆன்மதத்துவத்தில் அடங்கும். அசுத்த மாயைக்கு மேலுள்ள சுத்தா சுத்த மாயையாலாகிய வித்தியா தத்துவமும் அதற்குமேல் சுத்த மாயையாலாகிய சிவதத்துவமும் அவர்களுக்கு இல்லை. மூன்று கொள்கையர்களும் ஆன்ம தத்துவத்துக்கு மேல் வித்தியாதத்துவம் சிவதத்துவங்களில் விளங்குகிற உண்மையை அறிய முடியாது. ஆதலின், மூன்று கொள்கையர்களுடைய ஒன்றாய் நிற்கும் நிலையும் வேறாய் நிற்கும் நிலையும் உடனாய் நிற்கும் நிலையும் சேர்ந்த தொகுதி உண்மையும் சுத்தாத்துவிதத்திற்குரிய சிவதத்துவத்தில் விளங்கும் அத்துவிதப் பொது இலக்கண உண்மைக்கு ஒப்பாக மாட்டாதென்க.

55. மூன்று கொள்கையர்களும் ஆன்ம தத்துவத்திலடங்கிய இருபத்துநாலு தத்துவங்களில் விளங்கும் உண்மையை அறிகிற காரணத்தால் ஒரே அத்துவித இலக்கணங்கூறவேண்டியது முறைமையாயிருக்க அவர்களில் ஒவ்வொருவரும் வெவ்வேறு அத்துவித நிலையைக் கொள்ளுதல் எதனால் எனின் அவர்கள் இருபத்துநாலு தத்துவங்களில் வைத்து அறிகிற உண்மையிலும் அவைகளினது ஒவ்வொரு கூறினையே அறிந்து கூறுகிறார்கள். ஒரு மலையினுச்சியில் ஒரு விளக்கு இருக்கிறதாயிருந்தால் அந்த மலையினுச்சிக்கு மூன்று பக்கங்களி லேறிச் செல்லுகிறவர்களும் தங்கள் தங்கள் பக்கத்தில் விளங்குகிற பொருளை மாத்திரம் அறிவார்களே அன்றி, ஒரு பக்கத்தில் ஏறிச் செல்லு

கிறவர்கள் தங்களுக்குத் தெரியாமலிருக்கிற மற்றொருபக்கத்தில் விளங்குகிற பொருளை அறிய மாட்டார்கள். அதுபோலக் கேவலாத்துவிதிகள் தாங்கள் கொள்ளுகிற இருபத்துநாலு தத்துவங்களினது ஒரு கோடி (Extreme)யில் விளங்குகிற ஒன்றாய் நிற்கும் அத்துவித ஒற்றுமை நிலையை மாத்திரம் கூறுகிறார்கள். துவிதிகள் அந்த இருபத்துநாலு தத்துவங்களினது மற்றொரு கோடி (Extreme)யில் விளங்குகிற வேறாய் நிற்கும் அத்துவித வேற்றுமை நிலையை மாத்திரம் கூறுகிறார்கள். விசிட்டாத்துவிதிகள் இந்த இருகோடி நிலைகளையும் ஒப்புச் செய்து (Balancing) சேர்த்து அவைகளுக்கு இடையில் வைத்து உடனாய் நிற்கும் நிலையைக் கூறுகிறார்கள். இவ்வாறு இந்த மூன்று கொள்கையர்களும் அத்துவிதப் பொது இலக்கணத்தில் ஒவ்வொரு கூற்றினையே எடுத்துக் கூறுதலால் அவைகள் ஒன்றுக்கொன்று வேறுபாடு உடையனவாயிருக்கின்றன. பத்து உபநிஷத்துக்களும் பிரம சூத்திரமும் ஆகிய நூல்களே அவைகளை மூன்று கொள்கை ஆசாரியர்களும் தங்கள் தங்கள் கூர்த்த அறிவுகொண்டு விளக்குமுகத்தான் மூவகையான் வேறுபட்ட கொள்கைகளுக்கு இடந்தந்து நிற்பனவாயுள்ளன. ஆதலின் அவர்கள் அந்நூல்களினது கருத்தை அறிய நோக்கும் நிலை வேறுபாடுகளே (View-points) வேறுபட்ட கொள்கைகளுக்குக் காரணமாயுள்ளன என்பது இனிது விளங்கும்.

56. அத்துவித இலக்கண உண்மையானது உலகில் விளங்குகிற எல்லா உண்மைகளுக்குந் தாய் உண்மையாயுள்ளது. அதனைச் சார்ந்தே எல்லா உண்மைகளும் விளங்க வேண்டியனவாயுள்ளன. அத்தகைய அத்துவித இலக்கண உண்மை இந்து சமயப் பகுதிகளிலன்றி உலகிலுள்ள ஏனைய சமயங்களிற் கூறப்படவில்லை. மேற்கு நாட்டுத் தத்துவ நூலுடையாரும் (Philosophers) அத்துவித இலக்கண உண்மையைக் கூறவில்லை. அவர்கள் தங்கள் சமயமாகிய கிறிஸ்து சமயத்தைச் சாரவைத்துத் தங்கள் தத்துவக் கொள்கைகளைக் கூறவில்லை. கிறிஸ்து சமய வேதத்திலும் (Bible) அத்துவித இலக்கண உண்மையைப்போல உயர்ந்த தத்துவங்கள் கூறப்படவில்லை.

அஃது ஒரு உருவக் கடவுளையே (one personal God) கூறுகின்றது. அத்துவித இலக்கண உண்மையைக் கூறும் இந்து சமயப் பகுதிகளில் சைவசமயம் தவிர ஏனைய சமயங்களெல்லாம் மேலே கூறியபடி அத்துவித இலக்கண நிலைகள் மூன்றில் ஒவ்வொன்றினையே கூறுகின்றன. சைவசமயம் ஒன்று மாத்திரமே ஏனைய மூன்று சமயப் பகுதிகள்கூறும் மூன்று நிலைகளுஞ் சேர்ந்த அத்துவிதப் பொதுஇலக்கணத்தைத் தன்னுள் அடக்கி நிற்பதல்லாமல் அதற்கு மேற்பட்டதாயுமுள்ள அத்துவித உண்மையைக் கூறுகின்றது. இதுவன்றி அச்சமயம் இந்நூற்சிறப்பியலில் முடிவான வீட்டின்பத்தை அடையச் செய்யும் அத்துவிதச் சிறப்பு இலக்கண உண்மையையுங் கூறுகின்றது. இதனால் சைவசமயமானது உலகிலுள்ள மக்கள் எல்லாருக்கும் இம்மை நலம் மறுமை நலம் வீட்டு நலம் என்னும் மூன்று நலங்களையும் அடையச் செய்தற்கு எத்துணை சிறந்த நெறியாய் விளங்குகிறது என்பது தெள்ளிதிற் புலப்படும்.

57. இவ்வாறு முதல்வன் எவ்வாறு உயிர்களுடன் நிற்பன் என்று கூறப்படவே அவ்வுயிர்களில் அடங்கியுள்ள (வியாப்பியமான) மாயை வினை மாயேயங்களிலும் அவ்வாறே நிற்பன் என்பது அறிந்துகொள்க. இதனுடன் அத்துவிதப் பொது இலக்கணம் ஒருவாறு கூறப்பட்டு முடிந்தது. முதல் அதிகாரணம் இதனுடன் முடிந்தது. இனி, இரண்டாவது அதிகரணம் கூறப்படும்.

வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்

ஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள்

சரித்திரச் சுருக்கம்.

[நின்றை. தங்கவேலு முதலியார்.]

> "ஓரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
> வாராவின்ப வருங்கனி பிழிந்து
> சாரங் கொண்டசைவ சித்தாந்தம் "

என்னும் மெய்கண்ட சமயம், புறமதத்தர் கூறும் பித்துரை பேசு

ரைகளால் அலக்கழியா வண்ணஞ் சமயாசாரியார், சந்தான குரவர் முதலியோர் தோன்றி வரம்பு கட்டிச் சென்றனர். கால கதியால் வரம்பழியவே அதை மீட்டுக்கொடுக்க வந்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள் தங்கடமையை நன்கு முடித்துத் தற்சிவத்துற்றனர் எனக் கேட்டு மனந்திகைக்கின்றது. அந்தோ! அவர் மறைந்ததால் சைவ சமயிகளுக்கோ ஊன்று கோல் கைநழுவிவிட்டதுபோலும். சென்ற 35-வருடங்களாகச் சைவ சம்பந்தமான அனேக காரியங்கள் அவர் செய்திருப்ப தாலும், அவைகளின் பலனைப் பலரும் அனுபவித்துக்கொண்டு வருவதாலும், அவர் நம்மைவிட்டுப் பிரிந்தாரென்பது தோன்ற வேயில்லை. அவர் காலமாய்விட்டதால் உண்டான மனநோயைப் பல பத்திரிகைகளும் பண்டிதர்களும் முறையிட்டிருபபதால் அம்மகா புருஷார்த்தினத்தினிடத் தன்பும் நன்றியும் பாராட் டாத சாம்புவன் எவனுளன்? அவர் வேதாகம உணர்ச்சியையும் விஜய வைபவத்தையுங் கேட்க விரும்பாத ஆரிய னெவனுளன்? அவர் வாக்கு சாதுரியத்தையுந் தீர விசேடத்தையும் வாத கம் பீரத்தையுந் தெரிய விரும்பாத வேதபாஹ்ய னெவனுளன்? ஆகவே அவர் பிரதாபத்தை யிடங்கொடுத்த வரையில் ஒரு வாறு சுருக்கி யெழுதலாயிற்று. விஷயங்கள் தொடர்ச்சியா யிராவிடின் உலகம் நம்மைப் பொறுக்க.

பிறப்பு வளர்ப்பு.

நமது நாயகரவர்கள் சென்னைச் சூளையில் நிலைபெற்றிருந்த ஓர் வைணவ குடும்பத்தில் கி. பி. 1846ளு ஆகஸ்டுமீ 6உ ஆதி வாரம் சிம்மலக்கினத்தில் நான்குகோள் உச்சமாகச் சைவத் துறை விளங்கப் பிறந்தனர். அரங்கசாமி யெனத் தாய்தந்தை யர்களிட்ட பெயரை இவருக்குப் பந்துவான அச்சுதானந்தரெ னும் ஓர் சைவ சன்னியாசி மாற்றிச் சோமசுந்தரமெனவழைத் துத் தாம் வளர்த்துச் சிவாதிக்யம் போதித்துச் சைவராக்கி வடமொழி தென்மொழி கற்பித்து வந்தனர். இராஜதானிக் கல்லூரியில் ஆங்கிலமுந் தெலுங்கும் பயின்று பிரவேசபரிக்ஷை வகுப்பு வரையில் வாசித்துக்கொண்டிருந்தார். இன்னணட்

நான்கு பாஷைகளிலும் போதிய ஞானம் வருவித்துக்கொண்டு நகர விசாரணைச் சாலையில் உத்தியோகத்திலமர்ந்திருந்தார்.

சமய விசாரணை.

அச்சுதானந்தர் ஏகான்மவாதத்திற் பற்றுடையவராய்த் தம் மாணுக்கருக்கும் அதையே போதிப்பாராயினர். கற்ற விஷயங்களைத் தம் நுண்ணிய ஆராய்ச்சியாற் சீர்தூக்கிச் சிக்கறுப்பதாகிய பெருங்குண மிவரிடத்திருந்ததாலும் செவியிற் பட்டதை யெல்லாம் நம்பும் பேதைமை யில்லாமையானும் ஏகான்மவாத நூல்களில் தமக்குச் சந்தேகமும் போதனையில் முரணும் நேர்ந்துழி தக்க சமாதானங்கள் கொடுக்கும்படி ஆசிரியரை விடாது நெருக்குவர். நுட்பமான கேள்விகளால் பலமுறை ஆசிரியர் விடையிறுக்க முடியாது மயங்கியதுண்டு. அப்போது நாயகரவர்கட்கு வயது 20 இருக்கலாம். அது புறச்சமயிகள் சைவத்திற் கின்னல் தேடிக்கொண்டிருந்த காலம். கறையான் குட்டை சபாபதி முதலியார் என்பவர்க்கிவர் உதவியாயிருந்து பிரசங்க வாயிலாய்ச் சைவசமய உண்மையினைப் பிரகாசப்படுத்திக்கொண்டிருந்தார். இவரது சிவநேசத் தன்மையை உணர்ந்த மதுரைநாயகம் பிள்ளை யென்பவர் இலவசமாய்க் கொடுத்த மெய்கண்ட சாத்திரத்தை முழுவதுங் கற்று, ஆசிரியர் போதனையிலுள்ள வழுக்களை அவர்க்கு எடுத்துக்காட்டி யச்சாத்திரத்தில் பற்றுண்டாகும்படி செய்தார். பின்பு அச்சுதானந்தர் காஞ்சியை யடைந்து ஆதிசைவரிடம் ஆசாரியாபிடேகமுற்று, ஏகாம்பர சிவயோகியாரெனத் தீக்ஷாநாமம் பெற்றுக்கொண்டனர். நாயகரவர்கள் வைணவத்திற் பிறந்து, பின்பு தமக்கு ஏகான்மவாதம் போதித்த ஆசிரியருந் தாமுஞ் சைவ சித்தாந்த போதகராயினமையை நோக்க, அவராராய்ச்சியின் தெளிவு நன்கு புலப்படும். உத்தியோக நிர்பந்தத்தால் சமய பாதுகாப்புக்கு வேண்டு மவகாசங் கிடைக்கப் பெறாமையின் தஞ்சுயநலத்தையும் போற்றாது 1881ஆ வேலையைவிட்டு நீங்கினர்.

நூலாசிரியர் தன்மை.

நாயகரவர்கள், சற்றேறக்குறைய 100 சத்கிரந்தங்கள் இயற்றியுள்ளார். அவைகளில் "வேதபாஹ்ய சமாஜகண்ட

கம்'' என்னும் முதல்நூல் 1868ஞு ஆகஸ்டுமீ வெளியாயிற்று. சுந்தர சிவாசாரியர் என்பவர் பெயரால் தாம் இயற்றிய சிவாதிக்ய ரத்நாவளி க-ம் பாகத்திற்கு உ-பாகம் பின்பு இயற்றி 1873ஞு வெளியிட்டு அந்நூலைப் பூர்த்தி செய்தார். அந்நூலுடன் அவர் புகழும் வெளியேறிற்று. அவரியற்றிய மற்றைய நூல்கள்: சைவசூளாமணி, பரதத்துவப் பிரகாசிகை, பிரம்ம தத்துவ நிரூபணம், அர்ச்சா தீபம், ஆதிசைவப் பிரபாவம், சித்தாந்த ரத்நாகரம், சித்தாந்த ஞானபோத முதலியனவாம். பிந்திய விரண்டுஞ் சஞ்சிகை ரூபமாய்ப் பல அருமை நூல்களையுள்ளடக்கி வெளிப்போந்தன. அவற்றின அந்தம் "மெய்கண்ட சிவ தூஷண நிக்கிரஹம்'' என்னு முண்மை நூல். இஃது அவருடைய இறுதிக்காலத்திற்கு 6-திங்கள் முந்தி வெளிப்பட்ட நூல். ஆக 33-வருஷம் கிரந்தகர்த்தரா யுழைத்தாரென்பது தெரியவருகிறது. இவர் நூல்களை இரண்டு பெரும் பிரிவுகளாக்கலாம். ஒன்று, சைவத்தின் பெருமையைக் கூறுவது; மற்றொன்று, புறமதங்களின் புறங்கூற்றுகளை விசாரித்து அம்மத சொரூபங்களிலுள்ள வழுக்களை யெடுத்துக் காட்டுவது. அப்பைய தீக்ஷித சுவாமிகளும் இவ்வாறே சுயமதஸ்தாபனமாகவும் புறமத பங்கமாகவும் நூலியற்றியுள்ளாராதலினாலும், புறமதத்தினர்க்கு நல்லறிவுச் சுடர்கொளுத்த வேண்டுமென்ற காருண்ய மேலீட்டாற் பல கிரந்தங்களை நாயகரவர்கள் சலியாமல் இயற்றியதாலு மவருக் கழியாப் புகழும் புண்ணியமும் சித்தித்தன. சைவ சித்தாந்தக் கருததுக்களை தமிழில் கத்திய ரூபத்தில் இவர்தான் முதன் முதல் வெளியிட்டவர். இவர் தமக்கெனவோர் மணிப்பிரவாள நடையைக் கற்பித்துக் கொண்டு வாசிப்பவர்க் கின்பமூட்டும் பெரும்பாக்கியத்தைப் பெற்றிருந்தார்.

பிரசங்கங்கள்.

இவர் கிரந்த கர்த்தாவா யிருந்ததுமன்றித், தமிழ்நாடெங்கு முலவித் தம் பிரசங்க கர்ச்சனையால் சைவத்திற்குப் பழி கூறியவர்கள் ஓடிப் பதுங்கும்படி செய்திருந்தார். தென்தேசத்தின் ஒவ்வொரு பிரதான நகரத்தாரு மிவர் பிரசங்க மழையைச்

செவிபான் மாந்தியதுண்டு. சைவசித்தாந்தத்தின் மகிமை இவர் பிரசங்கத்தால்தான் அதிகமாய் வெளியாயிற்று. "சமயங்களெல்லாஞ் சித்தாந்தத்திற்கு அங்கமாகும்., சித்தாந்தத்திற் கெம்மதமுஞ் சம்மதம். இதற்கு மேற்பட்டுச் சமயப் பொறுமையுடையது. மற்றெம்மதமுமில்லை." என்னு முண்மையினைக் காட்டிப் பலரைச் சித்தாந்திகளாக்கிவிட்டனர். திரிசிரபுரத்தில் இவர் அடுத்தடுத்துப் பிரசங்கஞ் செய்ய நேரிட்டதால, அங்குள்ள அந்தணர் பலர் இவர் வாக்கைக் குருமொழியாகக் கொண்டிருந்தனர். இவர் பிரசங்கத்தில் ஆயிரங்கணக்கான ஜனங்கள் கூடி ஓரே சிந்தனையாயுற்றுக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். இவர் அப்பையதீக்ஷித ரவர்களைப் போன்று சதநூல்களியற்றி ஹரதத்தரைப் போன்று தீரம்வகித்துத் திருஞானசம் பந்தரைப் போன்று திருமேனிகொண்டு திருநாவுக்கரசைப் போன்று சிவ வேடம் பொலிந்து, சுந்தரரைப் போன்று தாமரைத் தண்ணீர்க் கொப்பா யில்லறவாழ்க்கையை நடத்திச் சேக்கிழார்போன்று அடியார் பெருமையை விளக்கி மணிவாசகரைப்போன்று இன்னிசையாய்க் கனிவாய்ப் பிரசங்கித்ததால் யாவர்தான் இவர் கட்டில் அகப்படாதார்! திருநெல்வேலிச் சிவாலயத்தில் தத்துவ மண்டபத்தில் இவர் சில வருடங்களுக்குமுன் செய்த பிரசங்கத்தின் அருமையையும் வலிமையையும் அளவிடற்கரிதென அப்பதியிலுள்ளோர் இன்றும் இறும்பூதெய்துகின்றனர். சென்னையில் இவர் பிரசங்கங்களால் விளைந்த பலன்களை நோக்குழி, இவர் அருண் மூர்த்தியெனவே யெண்ணலாம். சமயாசாரியர் நால்வர்க்கும் பல ஸ்தலங்களில் திருவிழா உண்டானது இவரின் பெருமுயற்சியாற்றான்.

நன்குமதிப்பும் பட்டப்பேரும.

இவ்வாறு பல நூல்களானும், சைவப்பெருமணங் கமழுந் துரித கம்பீரவாக்கினாற் செய்த பிரசங்கங்களானும், சித்தாந்தத்தினுண்மை பிரகாசிக்கச் செய்தமையின், மடாதிபதிகள், ராஜாக்கள், ஜமீன்தார்கள் இவருக்கு வேண்டிய உதவி புரிந்து வந்தனர். ராஜா பாஸ்கர சேதுபதியவர்கள் "வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்" என்னும் பட்டப்பெயர் தந்து

மேம்பாடியற்றினர். திருவாவடு துறையார் "பரசமய கோளரி" யென ஆசிர்வதித்தனர். சாம்பவர்களெல்லாஞ் "சைவமார்த் தாண்டன்" எனப் புகழ்ந்து கொண்டாடினர்.

இறுதிக்காலம்.

முப்பது ஆண்டுகளாகச் சைவ நுட்பங்களிலாழ்ந்து உழைத்து வந்த இவரது தேக சௌக்கியம் 1898ஹு முதல் குன்றிக்கொண்டே வந்தது. அதையும் நோக்காது தங்கடமை யை நிறைவேற்றிக்கொண்டே வந்தார். சதுர்வேதம்போன்ற நான்கு கிரந்தங்கள இவ்விறுதிக்காலத்து வெளியாயின. வெளி நகர்களிலும் பல பிரசங்கங்க ளிடையிடையே நடந்துகொண்டு வந்தன. இவர் கடைசியாய்ச் செய்த பிரசங்கம் சென்னையிற் காசிவிஸ்வநாதர் ஆலயத்தில் அப்பிரசங்கத்தின் சுவை இன்று மினித்துக் கொண்டிருக்கிறது. அது நடந்து ஒரு திங்கள் முடியுமுன் விஸ்வேஸ்வரர் அவருக்குத் தாரகமந்திரமோதியது அவருபன்னியாச மகிழ்ச்சியாலெனச் செப்பலாம்.

நாளது 1901ஹு பிப்ரவரிமீ 22௳ சுக்கிரவார மாலை 4-மணிக்குத் தங்குருக்களைத் தருவித்து, விபூதிப் பிரசாதம் பெற்றுத் தரித்துத் தன் குமாரரைத் தேவார திருவாசகங்க ளோதச்செய்து கவனித்துத் தாமே "திருச்சிற்றம்பலம்" எனப் பூர்த்தி செய்து கைகூப்பிச் சிரசிற் சேர்த்து "இதோ இடப வாகனரூடராய் அர்த்த நாரீஸ்வரர் வந்திருக்கிறார், தரிசியுங் கள்" என்னுந் திருவார்த்தையுடன் மௌனஞ் சாதித்துச் சிவ ராஜ யோகத்திலமர்ந்திருந்தார். மார்த்தாண்டன் படும் வேளை வந்தது. ஹரஹர! "சைவமார்த்தாண்டர்" அத்துவிதானந் தத்தை யுற்றார்.

"செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே?"

என்பதிற் கிஞ்சித்தும் பிழையாம லுற்றதை நோக்க நாயக ரவர்கள் தெய்வீகத் தோற்றமும் சிவப்பிரீதி மறைவுமுற்றா ரென்பதே துணிபு.

சைவசித்தாந்த சபை

தூத்துக்குடி.

இச்சபையின் 47-ஆம் ஆண்டு நிறைவு விழா, நிகழ் டிசம்பர் 28-29-ஆம் (மார்கழித்திங்கள் 13-14-ஆம்) நாட்களில் நடைபெறும். அவ்விழாவின் பேரவைக்குக் கோயம்புத்தூர் வழக்கறிஞரும் சென்னை சர்வ கலாசங்க ஆலோசனைக் கழக உறுப்பினருமான உயர்திருவாளர். C. K. சுப்பிரமணிய முதலியார் B.A., அவர்கள் தலைமை வகிக்க அன்புடன் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.

மதிநுட்பம் நூலோடுடைய அறிஞர் பலர், சித்தாந்தம், தமிழ் இலக்கியம், ஒழுக்க முதலிய பொருள்கள் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். அன்றியும், சித்தாந்த சைவர்களின் முன்னேற்றம், தமிழ் மொழியின் வளர்ச்சி முதலியவற்றிற்குரிய தீர்மானங்களும் செய்யப்பெறும். அன்பர்கள் அனைவரும் வந்து விழாவினைச் சிறப்பிக்கவும், சொற்பொழிவுகளைக் கேட்டு இன்புறவும் வேண்டுகின்றோம். விபரமான நிகழ்ச்சிக் குறிப்பு காரியதரிசிகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மதிப்புரை

தமிழ்க்கடல் வெளியீடு — க.

இதன் பதிப்பாசிரியர் திரு. கா. நமச்சிவாய முதலியாரவர்கள். இவர்கள் தமிழ் நூல்களையெல்லாம் முறைப்படுத்தி ஓர் அமைப்பாக வெளியிடுவான் கருதி அவ்வையார் அருளிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்னும் இரண்டு நூல்களையும் உரையுடன் முதல் வெளியீடாக வெளியிட்டிருக்கின்றார்கள். இதன்கண் இராமாநுசக் கவிராயர் உரையும் திருநெல்வேலியில் கிடைக்கப்பெற்ற பழைய உரையும் முன் பதிப்பித்தவாறே அச்சிட்டுச் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. அவற்றில் சில பாடபேதங்கள் வியப்பும் உவப்புந் தருவனவாய்க் காணப்படுகின்றன. இஃது ஆராய்ச்சியாளர்க்கும் நூல் நிலையங்கட்கும் மிகவும் பயன்படும். இதன் தொடர் வெளியீடுகள் மாதம் ஒவ்வொன்றாக வெளிவரும். இதன் விலை தெரியவில்லை.

இதனைப் பெற விரும்புவோர் சென்னை சாந்தோம் தமிழ்க்கடல் ஆபீசு மானேஜர் அவர்கட்கு எழுதுக.